'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 33 சோபகிருது வருடம், ஆடி மாதம் 22ஆம் திகதி திங்கட்கிழமை (07.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 19, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## பெற்றோலிய கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் நால்வர் இராஜினாமா

02பக்கம்

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலை!





### பாரதிய ஜனதாவின் முக்கியஸ்தரும் இந்திய அமைச்சருமான அமித் ஷா பகிரங்க அறிவிப்பு

### தமிழர்கள் மீது நடந்தது 'நரசங்கார' என்றும் சுட்டிக்காட்டு

இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக இந்திய உள்துறை அமைச்சரும் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தருமான அமித் ஷா பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். இராமேஸ்வரத்தில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் பேசிய காணொளி தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



அப்போ இனப்படுகொலை நடந்தபோது அமைதியாக பார்த்துக்கொண்டிருந்ததோ பா.ஜ.க.? அதில தவறு இல்லையோ?

## இம்ரான் கைதுக்கு எதிராக பாகிஸ்தானில் போராட்டம்

07பக்கம்

## சீன-பாகிஸ்தான் கூட்டமைப்புக்குரிய விலைமனுவை இரத்துச் செய்தது அரசு

### எல்.என்.ஜி. திட்டத்தை இந்தியாவுக்கு வழங்க ஆலோசனை

பு.கஜிந்தன்

திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை (எல்.என்.ஜி.) வழங்குவதற்காகவும் குழாய் வலையமைப்பை அமைக்கவும் சர்வதேச திறந்த போட்டி ஏல முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட சீன-பாகிஸ்தான் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட விலைமனுவை இரத்துச் செய்ய... 02 பக்கம்

## மாணவர்களது புத்தகப் பையின் எடையை குறைக்கத் தீர்மானம்

### 2024ஆம் ஆண்டு முதல் பருவப் பரீட்சைகளும் குறைக்கப்படும்

எதிர்காலத்தில் பாடசாலைத் தவணை ஒன்றுக்கு ஒரு செயன்முறைப் புத்தகம் என்ற அடிப்படையில் மூன்று தவணைகளுக்காக மூன்று புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் மாணவர்களின் புத்தகப் பையின்.. 02 பக்கம்

## முழு அதிகாரத்துடன் 13 ஆவது திருத்தம்

### அமுலாக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

காணி, பொலிஸ், நிதி, நிர்வாகம் உள்ளிட்ட முழுமையான அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும்படி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புவதென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலாளர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்திருந்தார். 02 பக்கம்

## இராமேஸ்வரம் - தலைமன்னார் படகுச்சேவை விரைவில் ஆரம்பம்

### முதற்கட்ட அபிவிருத்திக்கு ரூ.1,800 மில்லியன் ஒதுக்கீடு



பு.கஜிந்தன்

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கையின் தலைமன்னாருக்கு 37 ஆண்டுகளுக்குப் பின் பயணிகள் படகுச்சேவை மூன்று மாதங்களில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் தமிழ்நாடு இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவை இடம்பெறவிருந்த நிலையில், தற்போது அது தலைமன்னாருக்கும்... 02 பக்கம்

## செல்ஃபி எடுக்க தடை விதிப்பு



### ஜனாதிபதி பணிக்குழாமுக்கு விசேட அறிவுறுத்தல்

02பக்கம்




விவசாயிகளுக்கு நீரை வழங்குவது தொடர்பில் அமைச்சரவை தீர்மானங்களை விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டில் அமைச்சர் ரொஷான் ரணசிங்க இன்று ஜனாதிபதி முன்னிலையில் விளக்கமளிக்க அழைக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரின் விளக்கம் முறையாக இல்லாவிடின் அவரை அமைச்சுப் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கவும் வாய்ப்பிருப்பதாகத் தகவலொன்று சொல்கிறது.

எவ்வாறாயினும், விவசாயிகளுக்கு சார்பாக பேசப்போய் அமைச்சுப்பதவி பறிபோனாலும் பரவாயில்லை என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளாராம் அமைச்சர் ரொஷான் ரணசிங்க.

## திடீர் காய்ச்சலால் சிறுவன் உயிரிழப்பு

### நீர்கொழும்பு வைத்தியசாலையில் சம்பவம்

02பக்கம்

## உள்ளூராட்சி மன்றங்களில் இணையவழி பணப்பரிமாற்றம்

### இந்த வருட இறுதிக்குள் அறிமுகப்படுத்தத் திட்டம்

நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களிலும் இணையவழி ஊடாக பணம் செலுத்தும் முறை இந்த வருட இறுதிக்குள் அறிமுகப்படுத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது 69 உள்ளூராட்சி மன்றங்களில் இது அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் மதிப்பீட்டு வரி உள்ளிட்ட வரி செலுத்தும்... 02 பக்கம்

## பல்கலை மாணவன் யாழ். விபத்தில் பலி

02பக்கம்





தொழில் மற்றும் முதலீட்டு மூலதன தேவைகளுக்கு குறைந்த வட்டியுடனான கடன்

நலிவடைந்திருக்கும் வியாபாரங்களை மீள கட்டியெழுப்பும் நிதி மறுசீரமைப்பு

புதிய தொழில்முனைவோருக்கான வியாபார ஆலோசனைகள் மற்றும் நிதித்துறை வசதிகள்

ஏற்றுமதி வியாபாரத்துக்கு ஊக்குவிக்கும் ஆலோசனைகள் மற்றும் குறுகியகால நிதித்துறை வசதிகள்

மேலதிக விபரங்களுக்கு இப்பொழுதே 0112 481608 / 0112 481356 / 0112 481426 க்கு அழையுங்கள் அல்லது அருகிலுள்ள மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்ளலாம்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

A (lka) பிட்ச் ரேட்டிங், AAA பிராண்ட் பினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

# முன்னணி வங்கியாளர் கிளைவ் பொன்சேகா மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி - பொது முகாமையாளராக நியமனம்

ஓகஸ்ட் 1, 2023 முதல், பிரதம நிறைவேற்று அதிகாரி - பொது முகாமையாளராக கிளைவ் பொன்சேகா நியமனம் செய்யப்பட்டதை அறிவிப்பதில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகிறது. அவர் ஜனவரி 01, 2023 முதல் வங்கியின் தற்காலிக பிரதம நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளராக கடமையாற்றியுள்ளார். பொன்சேகாவின் விரிவான அனுபவம் மற்றும் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் அவரை மக்கள் வங்கியை அடுத்த கட்ட வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு இட்டுச் செல்லும் மிகச்சிறந்த வேட்பாளராக ஆக்குகின்றது.

துறையில் பெரும் அனுபவம்மிக்க கிளைவ் பொன்சேகா, இலங்கை வங்கியாளர்கள் கற்கை நிலையத்தின் சக அங்கத்தவராவார். மற்றும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற முகாமைத்துவ மேற்பட்டப்படிப்பு கற்கை நிலையத்தில் வர்த்தக நிர்வாகத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். 30 வருடங்கள் நீடித்த அவரது சிறப்புவாய்ந்த தொழில் வாழ்க்கையில், பொன்சேகா, திறைசேரி முகாமைத்துவத்தில் விதிவிலக்கான நிபுணத்துவத்தை வெளிப்படுத்தி, சமகாலத்தவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களிடமிருந்து மரியாதையைப் பெற்றார்.

2018 முதல் 2020 வரை முதனிலை வணிகர்கள் சங்கத்தின் தலைவராக பொன்சேகா கடமையாற்றிய காலத்தில், சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியதோடு, நிதித்துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை முன்னெடுத்தார். தேசிய கொடுப்பனவுகள் ஆணைக்குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு உட்பட பல மதிப்பிற்குரிய குழுக்களில் அவரது தீவிர ஈடுபாடு, நிதி சுற்றுச்சூழல் அமைப்பின் முன்னேற்றம் மற்றும் ஸ்திரத்தன்மைக்கான அவரது அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

நிதிச் சந்தைகள் மற்றும் அடிப்படை வட்டி விகிதங்கள் பற்றிய பொன்சேகாவின் ஆழமான புரிதல், இலங்கை மத்திய வங்கியில் உள்நாட்டு நிதிச் சந்தை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சந்தை பணிக்குழுவில் அவரது முக்கிய பங்குக்கு வழிவகுத்தது. நாட்டின் நிதி நிலப்பரப்பை வடிவமைப்பதில் அவரது நுண்ணறிவு மற்றும் நிபுணத்துவம் விலைமதிப்பற்றது.

தற்போது, பொன்சேகா, பீப்பள்ஸ் லீசிங் & பைனான்ஸ் பிஎல்சி, பீப்பள்ஸ் லீசிங் பிராப்பர்ட்டி டெவலப்மென்ட் லிமிடெட் மற்றும் LankaPay (பிரைவேட்) லிமிடெட் உள்ளிட்ட பல்வேறு மதிப்புமிக்க நிறுவனங்களில் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக பணியாற்றுகிறார். இந்த நிறுவனங்களில் அவரது ஈடுபாடு, தொழில்துறையின் சிறப்பை மேலும் வளர்ப்பதற்கான அவரது அர்ப்பணிப்பை மேலும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2002 இல் மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர், பொன்சேகா, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி மற்றும் ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி போன்ற புகழ்பெற்ற நிதி நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து, ஒன்றுக்கொன்று மாறான மற்றும் சவாலான சூழல்களில் செழித்து வளரும் திறனை வெளிப்படுத்தினார்.

நவம்பர் 2011 முதல் மக்கள் வங்கியில் பிரதிப் பொது முகாமையாளராகப்



பணியாற்றிய பொன்சேகா, அந்நியச் செலாவணி நடவடிக்கைகள், முதனிலை வணிகர்கள் பிரிவு நடவடிக்கைகள், முதலீட்டு வங்கிப் பிரிவு மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD) மற்றும் இலங்கை ரூபா (LKR) பணச் சந்தை நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் முன்மாதிரியான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான உறவுகளின் அவரது திறமையான மேலாண்மை வங்கியின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.

பிரதம நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர் என்ற வகையில் கிளைவ் பொன்சேகாவின் வழிகாட்டுதலின் கீழ், மக்கள் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் புதுமையான தீர்வுகள் மற்றும் இணையற்ற சேவைகளை வழங்கி, ஒரு முதன்மையான நிதி நிறுவனமாக தனது நிலையை தொடர்ந்து வலுப்படுத்தும் என்று பணிப்பாளர்கள் சபை நம்பிக்கை கொண்டுள்ளது.

745 சேவைத் தளங்களைக் கொண்ட நாட்டின் மிகப் பெரிய கிளை வலையமைப்பையும் 14.7 மில்லியன் வாடிக்கையாளர் தளத்தையும் கொண்ட மக்கள் வங்கி, இலங்கையின் மிகப் பெரிய மற்றும் மிகவும் மரியாதைக்குரிய வங்கிகளில் ஒன்றாகும். வங்கியானது 03 டிரில்லியன் ரூபாவுக்கு மேலான ஒருங்கிணைந்த சொத்துகளையும் 2.5 டிரில்லியன் ரூபாவுக்கும் அதிகமான ஒருங்கிணைந்த வைப்புத் தொகையையும் கொண்டுள்ளது. The Banker Magazine (UK) சஞ்சிகையானது, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் மக்கள் வங்கியை அடையாளம் கண்டுள்ளது.

# கொத்மலை நீர் மகாவலிக்கு!

கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து 2000 ஏக்கர் அடி நீரை மகாவலி பகுதிகளுக்கு விடுவிக்க இலங்கை மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கும் கலா வாவி, நாச்சதுவ மற்றும் தம்புலு ஓயா ஆகிய பகுதிகளுக்கு நீர் திறந்து விடப்படவுள்ளதாக இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் நிலந்த தனபால தெரிவித்துள்ளார்.

பொல்கொல்லயிலிருந்து போவதென்ன வரை சுரங்கப்பாதை ஊடாக நீர் கொண்டு செல்லப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, சிறுபோகத்துக்காக விடுவிக்கப்படும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# சாரதிகளின் தவறுகளை தெரிவிக்க விசேட செயலி

சாரதிகள் இழைக்கும் தவறுகளை தெரிவிப்பதற்காக விசேட செயலியொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

சாரதிகள் இழைக்கும் தவறுகளை குறித்த செயலி ஊடாக பயணிகளால் நேரடியாக தெரிவிக்க முடியும் என இலங்கை போக்குவரத்து சபையின் விபத்து தொடர்பான விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகள் இழைக்கும் தவறுகளை ஆவணப்படுத்தும் வகையில், சாரதிகளுக்கு குறைபாடு பரிசோதனை புத்தகமொன்றை அறிமுகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சாரதிகள் செய்யும் தவறுகளை பரிசோதகர்களால் அடையாளம் காண முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 218 பஸ்கள் விபத்துக்குள்ளாகியதில் 19 பேர் உயிரிழந்துள்ளதாக எரந்த பெரேரா தெரிவித்தார்.

## பெற்றோலிய...

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விற்பனை பிரிவில் கடமையாற்றிய சிரேஷ்ட அதிகாரிகள் நால்வர் கடந்த வெள்ளிக்கிழமை இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துள்ளதாக அறியமுடிந்தது.

தனியார்த்துறையில் பணிக்குச் செல்வதாக காரணம் கூறி இராஜினாமா செய்துள்ளபோதிலும் பாரிய எரிபொருள் மோசடி குறித்து விசாரணை இடம்பெற்றுவரும் நிலையில் இவர்களுடைய பதவி விலகல் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது.

உள்நாட்டில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்துள்ள வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் இவர்கள் இணையவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும், அதிக வருமானம் பெற்றுவந்த சிபெட்கோ எரிபொருள் நிலையங்களை இவர்கள் தெரிவுசெய்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவியபோது அதிக தரகுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு தொழிற்சாலைகள் மற்றும் ஹோட்டல்களுக்கு எரிபொருளை வழங்கியதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள அதிகாரியொருவரும் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்தோரில் அடங்குவதாக கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் சங்கம் அமைச்சிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## பல்கலை...

**யாழ். செய்தியாளர்**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நுவரெலியாவை சேர்ந்த கருப்பையா பிரதீசன் (வயது 22) எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆனைப்பந்தி சந்தியில் மாணவன் பயணித்த மோட்டார் சைக்கிளும் பிறிதொரு வாகனமும் கடந்த 03ஆம் திகதியன்று மோதி விபத்துக்குள்ளானதில் மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## இலங்கையில்..

இனப்படுகொலையை சுட்டிக்காட்டும் விதமாக 'நரசங்கார' என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியுள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவரான கு. அண்ணாமலையின் தலைமையில் 'என் மண்-என் மக்கள்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் பாதயாத்திரையின் ஆரம்ப நிகழ்வின்போதே அமித் ஷா இவ்வாறான கருத்துகளை தெரிவித்துள்ளார்.

"காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சியில் தான் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்தது. தமிழக மீனவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள்" என அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் முக்கியஸ்தரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்தபடியாக பலம்வாய்ந்த பொறுப்பில் உள்ளவருமான அமித் ஷா இந்த விடயம் தொடர்பில் ட்விட்டரிலும் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களது...

அதிக எடை குறைவதுடன், மாணவர்களின் முதுகுத்தண்டை நேராக வைத்து உடல் ஆரோக்கியம் காக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையை மாற்றும் வகையில் 2024ஆம் ஆண்டின் முதலாம் ஆண்டு தொடக்கம் பருவப் பரீட்சைகள் குறைக்கப்பட்டு வருடத்துக்கு ஒரு பரீட்சை மாத்திரமே நடத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு செய்ய முடிந்தால், ஒவ்வொரு பாடம் அல்லது தொகுதியின் முடிவிலும் மதிப்பீடு மூலம் மதிப்பெண்கள் கணினி குறிப்புகளாக பதிவு செய்யப்பட்டு, ஆண்டின் இறுதியில் பரீட்சை மதிப்பெண்களுடன் சேர்க்கப்படும், ஆரம்பத்தில் இது 70 வீதமாகக் கருதப்படும். பரீட்சை மதிப்பெண்ணில் 30 வீதம் மற்றும் தொகுதி மதிப்பெண்ணில் 30வீதம் என்ற அடிப்படையிலும் படிப்படியாக அது 50வீதமாக குறிப்பிட்ட வரம்புக்கு கொண்டு வரப்படும் என்று அமைச்சர் கூறினார்.

இம்முறையை நடைமுறைப்படுத்துவதில் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வருவதும், தங்குவதும், வகுப்பில் பணியாற்றுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்குச் செல்ல இடமோ தேவையோ ஏற்படாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் பெற்றோர்கள் தேவையற்ற போட்டியில் சிக்கிக் கொள்ளாமல் கூடுதல் வகுப்புகளுக்கு ஆயிரக்கணக்கில் பணம் செலவழிக்க முடியும் என்றும் அந்த பணத்தை குழந்தைகளின் உணவு மற்றும் குடிநீர்த் தேவைக்கு செலவிட முடியும் என்றும் இலவச கல்வியின் அடிப்படை நோக்கங்கள் நிறைவேறும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஜயவர்தனபுர கல்வி வலயத்துக்குட்பட்ட ஹேவாகம மாதிரி ஆரம்ப பாடசாலையின் மாணவர் தலைவர்களுக்கான உத்தியோகபூர்வ சின்னங்கள் அணிவிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சீன-பாகிஸ்தான்...

அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கு பதிலாக ஒரு இந்திய நிறுவனத்துக்கு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படுகிறது.

மின் உற்பத்தி செலவைக் குறைக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சீனா-பாகிஸ்தான் எங்ரோ கூட்டமைப்பு கடந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், கடந்த திங்கட்கிழமை, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, "நாட்டில் இயற்கை எரிவாயு உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான தேசிய எரிசக்தி கொள்கையை மறுபரிசீலனை செய்தல்" என்ற தலைப்பிலான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து, தற்போதைய எல்என்ஜி கொள்முதல் செயல்முறையை இடைநிறுத்தினார்.

தற்போதுள்ள மற்றும் வருங்கால கெரவலப்பிட்டி மற்றும் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையங்களுக்கான கடலோர மறு-எரிவாயு திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு பரிமாற்ற பைப்லைன் நெட்வொர்க்குடன் கடலோர கொள்முதல் வசதி மற்றும் மிதக்கும் சேமிப்பு மற்றும் மறு-எரிவாயு அலகு அமைப்பதற்காக சீன, பாகிஸ்தான் நிறுவனம் தெரிவாகியிருந்தது.

முறையான விலைமனுக்கோரல் செயல்முறைக்குப் பிறகு, கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு என்க்ரோ கூட்டமைப்புக்கு திட்டத்தை வழங்க ஒப்புதல் அளித்தது.

அதன் பிரகாரம், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு இவ்வாறு டெண்டரை வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டியிருந்தபோதிலும், அமைச்சு அந்த நடவடிக்கையை தாமதப்படுத்தியதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விலைமனுவை சீனா-பாகிஸ்தான் நிறுவனத்துக்கு வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், செயல்முறை தாமதமாகிவிட்டதாக தெரிய வருகிறது.

எவ்வாறாயினும், இறுதியாக இந்த சூழ்நிலையில், உத்தியோகபூர்வமாக அனுமதிக்கப்பட்ட இந்த விலைமனுவை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியை அமைச்சர் காஞ்சன கோரியிருந்தார்.

அமைச்சு இந்த டெண்டரை இந்தியாவின் பெட்ரோநெட் எல்என்ஜி லிமிடெட் நிறுவனத்துக்கு கோரப்படாத கொள்முதல் என்று வழங்க முயற்சித்தது. ஆனால் அந்த நிறுவனத்துக்கு மிதக்கும் சேமிப்பு மற்றும் மறு-எரிவாயு அலகு தொடர்பாக எந்த அனுபவமும் இல்லாததால், அமைச்சு கோரிக்கையை நிராகரித்ததுடன், இந்திய அரசாங்கம் நிறுவனத்தை ஆதரித்தால், அவர்கள் கன்டெய்னர்களில் எல்என்ஜியை வழங்க முடியும் என குறிப்பிட்டது.

"இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மோசமாக பாதிக்கும். மேலும் உண்மையான முதலீட்டாளர்கள் இந்த நாட்டுக்கு எதிர்காலத்தில் முன்வரமாட்டார்கள்" என்று அந்த மின்சக்தி அமைச்சின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர், "இந்திய நிறுவனத்தால் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், எந்த போட்டியும் இருக்காது என்பதால் இது ஒரு விலையுயர்ந்த தீர்வாக இருக்கும்" என்றார். இது அதிகரிக்கப்படும் மின் கட்டணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் அனைத்து செலவுகளும் நுகர்வோர் மீது செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

2018ஆம் ஆண்டு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மின்சாரசபையின் குறைந்த செலவு நீண்ட கால உற்பத்தி மற்றும் விரிவாக்கத் திட்டம் (2018-2037), மின் உற்பத்தி செலவைக் குறைப்பதற்காக உலை எண்ணெய் மற்றும் டீசல் மின் உற்பத்தி நிலையங்களை LNG மின் உற்பத்தி நிலையங்களாக மாற்றுவதன் அவசியத்தை அடையாளம் காட்டுகிறது.

அதன்படி, பெப்ரவரி 18, 2021 முதல் ஜூன் 25, 2021 வரை சர்வதேச போட்டித் திறந்த டெண்டர்களை மின்சாரசபை அழைத்தது. இதற்காக இரண்டு ஏலதாரர்கள் முன் வந்தனர்.

அந்த நேரத்தில், 2021இல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய அமெரிக்காவை தளமாகக் கொண்ட நியூ ஃபோர்ட்ரெஸ் எனர்ஜி நிறுவனம், இந்த டெண்டருக்கான திறந்த ஏலத்தை சமர்ப்பிக்காமல், அரசாங்கத்திடம் கோரப்படாத ஒரு திட்டத்தை முன்வைத்தது. இந்த கோரப்படாத பிரேரணையை ஆதரித்த அப்போதைய கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கம், திறைசேரிக்கு சொந்தமான 300 மெகா வோர்ட் திறன் கொண்ட கெரவலப்பிட்டிய யுகதனவி டீசல் மின் உற்பத்தி நிலையத்தின் 40% பங்குகளை நியூ ஃபோர்ட்ரெஸ் எனர்ஜி நிறுவனத்துக்கு விற்பனை செய்வதற்கான ஒப்பந்தத்தில் கூட கைச்சாத்திட்டிருந்தது.

எனினும், இந்த ஒப்பந்தத்துக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால், இந்த ஒப்பந்தம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

இந்தப் பின்னணியில், விலைமனுக் கோரலுக்கான முறையான ஏலங்களைச் சமர்ப்பித்த இரண்டு நிறுவனங்களில் ஒன்றான சீனா-பாகிஸ்தான் கூட்டமைப்புக்கு டெண்டரை வழங்க அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு கடந்த ஆண்டு ஓகஸ்ட் 04ஆம் திகதி ஒப்புதல் அளித்திருந்தது.

## முழு அதிகாரத்துடன்...

ரெலோ, புளொட் ஆகியன 13ஆவது திருத்தம் தொடர்பில் தனித்தனியாக யோசனைகளை சமர்ப்பிக்காமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 05 கட்சிகளுடனும் கலந்துரையாடி, கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி நேற்று (06) காலை 10 மணியளவில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டம் இணைய வழியில் நடைபெற்றது.

13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோரியுள்ளதால், அது தொடர்பில் மட்டும் குறிப்பிடுவதென இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

காணி, பொலிஸ், நிதி, நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களுடனும் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, ஜனாதிபதி ரணில் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற சிங்கள ஆக்கிரமிப்பு, மத ஆக்கிரமிப்பு சம்பவங்களை பட்டியலிட்டும், பறாளாய் முருகன் கோயில் அரச மரத்தை உரிமை கோரும் முறையற்ற வர்த்தமானி உள்ளிட்ட- தமிழர்களின் தொல்லியல் சின்னங்களை அபகரிக்கும் வர்த்தமானிகளை மீளப்பெற வலியுறுத்தியும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## செல்ஃபி எடுக்க...

நாட்டுக்கு விஜயம் செய்யும் அரச தலைவர்கள், சிறப்பு விருந்தினர்கள் அல்லது முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி பணிக்குழாமை சேர்ந்தவர்கள் எவரும் தனியான புகைப்படங்களையோ செல்ஃபி புகைப்படங்களையோ எடுக்கக் கூடாது என தடைவிதித்து ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரியும் சகல அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் மூலம் வெளியிடப்படும் புகைப்படங்களை தவிர வேறு எந்த புகைப்படங்களையும் சமூக வலைத்தளங்கள் அல்லது ஊடகங்களில் வெளியிடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கடந்த மாதம் 28ஆம் திகதி விஜயம் செய்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரனுடன் சில அதிகாரிகள் தனிப்பட்ட ரீதியில் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டதையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட பின்னர் இந்த புகைப்படங்களுக்கு கிடைத்துள்ள பதில்களை கவனத்தில்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் தகவல்கள் தெரிவித்தன.

## திடீர் காய்ச்சலால்...

திடீர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுவன் ஒருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நீர்கொழும்பு பாடசாலையில் 08ஆம் தரத்தில் கல்வி கற்கும் 13 வயது மாணவன் ஆவார்.

இரு தினங்களுக்கு முன்னர் குறித்த சிறுவனுக்கு தலைவலியுடன் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் காய்ச்சல் கூடுவதும் குறைவதுமாக காணப்பட்டதாகவும் உயிரிழந்த சிறுவனின் தந்தை தெரிவித்தார்.

இந்நிலையில், தனது மகன் நேற்று முன்தினம் சனிக்கிழமை (05) இரவு நித்திரைக்கு சென்றுள்ளதாகவும் பின்னர் மகன் அசைவற்ற நிலையில் காணப்பட்டதால் அன்றிரவு 10.30 மணியளவில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் சிறுவனின் தந்தை தெரிவித்தார்.

இந்நிலையில், மகன் மூச்செடுப்பதில் சிரமத்தை எதிர்கொண்டார். வைத்தியர்கள் மகனை காப்பாற்ற கடுமையாக போராடினர். ஆனாலும், மகன் இன்று (06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 1.20 மணியளவில் உயிரிழந்துவிட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி...

நடவடிக்கைகள் அந்த உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்லைன் முறை மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒன்லைன் முறைமையின் கீழ் நிர்மாணங்களுக்கு அனுமதி பெற்றுக்கொள்ளும் பணியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக கூறும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மக்களுக்கு இலகுவான விடயங்களை வழங்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## இராமேஸ்வரம்...

இராமேஸ்வரத்துக்கும் இடையிலான சேவையாக மாற்றப்பட்டுள்ளது.

ஏனெனில், தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் சுமார் 18 கிலோமீற்றர் தூரமாகக் காணப்படும் நிலையில் விரைவான பயணத்தை மேற்கொள்வதற்காக திட்டம் மாற்றப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெற்ற மோதல்களின் போது தலைமன்னார் துறைமுகம் அழிக்கப்பட்டதுடன் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தலைமன்னாருக்கு விஜயம் செய்த கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா துறைமுகப் பகுதியை நேரில் பார்வையிட்டார்.

துறைமுகத்தின் எல்லையில் உள்ள அரசுக்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலம் துறைமுக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக கையகப்படுத்தப்படவுள்ளதுடன் முதற்கட்ட அபிவிருத்திக்காக சுமார் ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது



கொழும்பு றோயல் கல்லூரிக்கும் கண்டி திரித்துவக் கல்லூரிக்கும் இடையிலான 77 ஆவது வருடாந்த பிராட்பி கிண்ண ரக்பி போட்டியின் இரண்டாவது சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் (05) கொழும்பு றோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டுகளித்தார்.

# உணவுக் களஞ்சியசாலை சுற்றிவளைப்பு: ரூ.50 கோடி பெறுமதியான பொருட்கள் மீட்பு!

உணவுக் களஞ்சியசாலையொன்று நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளால் நேற்று முன்தினம் சனிக்கிழமை (05) சுற்றிவளைக் கப்பட்டுள்ளது.

வத்தளை, ஹெந்தலையில் உள்ள களஞ்சிய சாலை ஒன்றில் இறக்குமதி செய்யப்பட்ட மனித பாவனைக்கு உதவாத சுமார் 80,000 டின் மீன்கள் மீள்பொதி செய்யப்பட்டு சந்தைக்கு விநியோகம் செய்யப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கிணங்க நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அவசர சோதனைப் பிரிவு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் குறித்த களஞ்சியசாலையை சுற்றிவளைத்து சோதனைக் குட்படுத்தினர்.

இதன்போது இறக்குமதி செய்யப்பட்ட காலாவதியான பல்வேறு வகையான அரிசி வகைகள் புதிய பொதிகளுக்கு மாற்றீடு செய்து, சந்தைக்கு விநியோகம் செய்வதற்கு தயாராக இருந்தபோது இவை மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பாவனைக்கு பொருத்தமற்ற ஒரு தொகை பருப்பு வகைகளையும் அதிகாரிகள் கைப்பற்றினர்.

பருப்பு வகைகளில் காணப்பட்ட பூச்சி இனங்களை அழிப்பதற்காக மனித உடலுக்குப் பொருந்தாத பூச்சிக்கொல்லிகளும் பயன்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது. இதேவேளை குறித்த களஞ்சியசாலையில் காலாவதியான கொத்தமல்லி தொகையையும் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட உணவுப் பொருட்களின் மாதிரிகளை பரிசோதனைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதுடன் குறித்த களஞ்சியசாலையை தற்காலிகமாக மூடுவதற்கும் நடவடிக்கை எடுத்தனர்.இதேவேளை, இவை அனைத்தும் கொழும்பு, நான்காம் குறுக்குத் தெருவில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானவை என தெரியவந்துள்ளது.களஞ்சியசாலையில் உள்ள உணவுப் பொருட் களின் பெறுமதி 50 கோடி ரூபாய்க்கும் அதிகமா கும் எனவும் இதுவரையில் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சோதனை நடவடிக்கை இது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 22 ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் நாள். சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

**ரிஷபம்:** தேவையற்ற அலைச்சலால் விரக்தி அடைவீர்கள். உங்கள் பணம், பொருள் நஷ்டமேற்பட லாம்.

**மிதுனம்:** போட்டிப் பந்தயங்களில் திடீர் பண வரவு ஏற்படும் நாள்.தொழில் வகையில் சகாக்களின் உதவிகள் கிட்டும்.

**கடகம்:** தொழில் வகையில் திட்டமிட்ட காரியத்தை இன்று நிறைவேற்று வீர்கள். குடும்ப உறவுகளால் மகிழ்ச்சி.

**சிம்மம்:** உடல் உழைப்பு அதிகமாக தேவைப்படும் நாள். எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளா தீர்கள்.

**கன்னி:** திட்டமிட்ட காரியத்தை நடை முறைப்படுத்துவதில் பல தடைகளை சந்திப்பீர்கள். எதற்கும் நிதானம் வேண்டும்.

**துலாம்:** உங்கள் பங்குதாரர்களால் அதிக லாபங்களை அடைவீர்கள்.காதலில் வெற்றி வாகை சூடுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களோடு சந்தோஷமாக விருதுண்ணுவீர்கள். நீண்ட நாள் கடன் இன்று தீரப்போகிறது.

**தனுசு:** உங்கள் மனக்குறையை மற்றவர்க ளிடம் கொட்டிவிடுவீர்கள்.பிள்ளை களால் மனக்கவலை அடைவீர்கள்.

**மகரம்:** வீடு வாகனங்களால் சற்று செலவு கள் அல்லது தொல்லைகள் உண்டு.ஆனாலும் குடும்ப சுகம் உண்டு.

**கும்பம்:** இன்ப அனுபவங்களால் மன நிம்மதி அடைவீர்கள். எண்ணி காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட் டாலும் சமாளிக்குமளவு பணம் இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

| | |
|---|---|
| திதி | : சப்தமி பி.இ.4.14 வரை பின் அட்டமி (தேய்) |
| நட்சத்திரம் | : அஸ்வினி பி.இ.1.16 வரை பின் பரணி |
| யோகம் | : மரண யோகம் முழுவதும் |
| வார சூலம் | : கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| நல்லநேரம் | : பி.ப. 12.05– 12.35 மணிவரை |
| ராகுகாலம் | : 7.35– 9.05 மணி வரை |
| எமகண்டம் | : 10.35– 12.05 மணி வரை |
| குளிகை | : 1.35– 3.05 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தனஅதிஷ்டம் | : ஆயிலியம், கேட்டை,ரேவதி |

கணிப்பு : சிவா பாஸ்கரராவ் (ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# நறுவிலிக்குளத்தில் காற்று மின் சக்தி நிலையம்: மக்கள் எதிர்ப்பு போராட்டம்







*மன்னார் நிருபர்*

இயற்கையோடு இணைந்த நிலையான வளர்ச்சி திட்டத்தின் கீழ் மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கிராம பகுதியில் ஹிருரஸ் பவர் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 15 மெகா வாட் காற்று மின் சக்தி நிலையத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை(6) காலை 11 மணியளவில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி சிறுவர்களுக்கு அமைச்சரினால் பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கப் பட்டன.

இந்நிலையில் குறித்த காற்றாலை மின்சக்தி நிலைய திறப்பை கண்டித்து நறுவிலிக்குளம் கிராம மக்கள் அப்பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த காற்றாலை மின் கோபுரத்தினால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் இவ்விடயம் தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்,உரிய திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கு பல தடவை கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை எனவும் அந்த மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அதிகமானவர்கள் அருகில் உள்ள கடலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இதனால் அவர்களின் கடற்றொழில் நடவடிக்கை பாதிக்கப்படுவதாக வும் குறிப்பாக இரவு நேரங்களில் காற்றாலை கோபுரங்களில் இருந்து வெளிவரும் சத்தத்தினால் தாங்கள் பல்வேறு இடர்களை சந்திப்பதாகவும் இரவு நேரங்களில் நித்திரை கொள்ள முடியாதுள்ளதோடு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக தமது கிராமத்தில் மக்கள் குடியிருப் புக்குள் அமைக்கப்பட்டுள்ள 2 மின் காற்றாலை கோபுரங்கள் உடன் அகற்றப்பட வேண்டும் என அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

# கஞ்சா செடி வளர்ப்பு; பொலிஸாரால் ஒருவர் கைது

*எஸ்.கணேசன்*

அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தரவளை தோட்டத்தில், கஞ்சா செடி வளர்த்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக அட்டன் பொலிஸார் தெரிவித்தனர். அட்டன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, குறித்த சந்தேக நபரின் வீட்டுப் பகுதியை சுற்றி வளைத்த பொலிஸார், பூந்தோட்டத்தில் வளர்க்கப்பட்ட இரண்டரை அடி உயரமான கஞ்சா செடியை கண்டுபிடித்துள்ளனர்.

அட்டன் பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வட மாகாண ஆளுநர் முறையற்ற செயற்பாடுகளை நிறுத்த வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் வேண்டுகோள்

*பு.கஜிந்தன்*

அரசியல்வாதிகளின் கடிதங்களுக்கெல்லாம் வடமாகாண ஆளுநர் இடமாற்றங்களை வழங்க உத்தரவிடுவதும் இடமாற்றசபை தீர்மானங்களை புறந்தள்ளுவதும் கல்வி தொடர்பான சுற்றுநிருபங்களை மீறும் செயலாகும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட மாகாண ஆளுநர் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்தவும் தனது தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காகவும் முறையற்றவகையில் செயற்படுவது வடமாகாண கல்வியை சீரழிக்க துணைபோகும் செயற்பாடாகும்.

வடமாகாண ஆளுநரின் இத்தகைய அருவருப்பான செயற்பாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த முறையற்ற செயற்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடமாகாண கல்வியமைச்சும் வடமாகாண கல்வித் திணைக்களமும் வடமாகாண ஆளுநருக்கு அவரது தவறுகளை சுட்டிக்காட்டி வடமாகாண கல்வியில் அரசியல் தலையீட்டை நிறுத்த முன்வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி அறக்கட்டளையை மேம்படுத்தி மலையக வளர்ச்சிக்கு பயன்படுத்துக

## இந்தியத் தூதுவரிடம் மனோ கணேசன் கோரிக்கை



இந்திய தூதரகத்தில் அமைந்துள்ள பல்லாண்டு கால பழைமை வாய்ந்த மலையக கல்வி அறக்கட்டளையை புதுப்பித்து நோக்கங்களை விரிவாக்கம் செய்யுங்கள். அதில் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து இந்திய வம்சாவளி மலையக எம்.பிக்களையும் மலையக கல்வியியலாளர்களையும் சமூக முன்னோடிகளையும் மலையக கல்வி அபிவிருத்திக்காக பணியாற்றும் மன்றங்களையும் ஒன்றிணையுங்கள் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய தூதுவருடன் இடம்பெற்ற சந்திப்புப்பற்றி வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசாங்கம், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பான நலத்திட்டங்களுக்கு என பெயரிட்டு தர உறுதியளித்துள்ள இலங்கை ரூபாய் 300 கோடி நன்கொடை முழுவதையும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டும். அதற்கு மலையக கல்வி அறக்கட்டளை, முன்னுரிமை திட்ட வகுப்பாளராக, கண்காணிப்பாளராக செயற்பட வேண்டும். இது தொடர்பில், நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசி அதற்கான விசேட வாய்ப்பு, விதி முறைகளையும் பெற்றுத் தருவோம்.

இந்திய தூதரகத்தில் இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர் கல்வி அறக்கட்டளை இருக்கின்றது. அது இப்போது முறையாக செயற்படுவதில்லை. அதனை புதுப்பிக்க வேண்டும். புலமைப் பரிசில்களை மட்டுமே வழங்கி வந்த அதன் செயலாற்றல் நோக்கங்களையும் வீச்சு வரையறையையும் விரிவாக்கம் செய்யுங்கள். அதன் பெயரையும் காலத்துக்கு ஏற்ப மாற்றுங்கள். கல்வி உதவி பெறுகின்ற மாணவர்களின் தகைமைகளையும் புலமை பரிசில் எண்ணிக்கையையும் தொகையையும் அதிகரியுங்கள்.

பிரதமர் மோடி உறுதியளித்த முன்னூறு கோடி நன்கொடையை மலையக கல்வி வளர்ச்சிக்காக பயன்படுத்துங்கள். இந்த அறக்கட்டளை இது தொடர்பில் இலங்கை அரசுடன் ஒத்துழைத்து செயற்பட வேண்டும். ஆனால், பின்தங்கிய நமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியின் முன்னுரிமை திட்ட வகுப்பாளராக, கண்காணிப்பாளராக கல்வி அறக்கட்டளைதான் செயற்பட வேண்டும். அந்நிதி யாருக்காக, எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காக மட்டுமே அது பயன்படுத்தப்பட வேண்டும்.

அறக்கட்டளையின் செயலாற்றல் நோக்கங் களின் மூலம் மலையகக் கல்வி, தொழில் பயிற்சி விவகாரங்களில் அக்கறை காட்டப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் நாம் உங்களுக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

இன்றைய முன்னுரிமைப்படி, எமது சமூகத்துக்கு, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை. அல்லறும் மலையக இளம் பெண்களுக்கான தாதியர் பயிற்சி கல்லூரி வேண்டும். இந்த கல்வி அறக்கட்டளை பண புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கையும் வழங்கப்படும் தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும். பரிசில் பெறுகின்ற பெறுநர்களுக்கான வாழ்விட தகைமைகள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். அரச பல்கலைக்கழக வளாகம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தோம்.

எமது கோரிக்கைகளை செவிமடுத்த தூதுவர் கோபால் பாக்லே, பேசப்பட்டதன் உள்ளக விடயங்களை இம்மாத இறுதிக்குள் மீண்டும் சந்தித்து பேசுவோம் என்று உறுதி அளித்ததாகவும் கூறினார்.

# சிறைச்சாலை கண்காணிப்பாளர் மீது தாக்குதல்; ஒருவர் கைது

காலி சிறைச்சாலையில் கடமையாற்றும் சிறைச்சாலை கண்காணிப்பாளர் ஒருவர் பயணித்த பஸ்ஸில் ஏறி, அவர் மீது தாக்குதல் நடத்தி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்த குழுவைச் சேர்ந்த ஒருவரை பயணிகள் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத் துள்ளதாக வெலிகம தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான கண்காணிப்பாளர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சிறைச்சாலை கண்காணிப்பாளர் தனது கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது சுமார் 6 பேர் கொண்ட குழுவினர் பஸ்ஸில் ஏறி அவரைத் தாக்கியுள்ளனர்.

இதற்கு பயணிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்த தால், குறித்த குழுவினர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சித்த நிலையில் பஸ்ஸிலிருந்து தப்பியோடியுள்ளனர். இவர்களுள் ஒருவரே பயணிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் ஈ-குருவி நடைபவனி



உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்க்கை ஊடாக மதிப்பை மேம்படுத்தும் வகையிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் உருவாக்கும் வகையில் "ஈ-குருவி நடை 2023" நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை நடைபெற்றது.

யாழ்ப்பாண பொதுநூலக முன்றலில் ஆரம்பித்த குறித்த நடைபவனியானது, வைத்தி யசாலை வீதியூடாக சத்திர சந்தியை அடைந்து, அங்கிருந்து கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொது நூலகத்தை வந்தடைந்தது.

இந்நடைபவனியானது உடல் உள ஆரோக்கி யத்தை மேம்மடுத்தல், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் மதிப்பை மேம்ப டுத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டது.

ஈ-குருவி நடைபவனியானது கடந்த 2020ஆம் ஆண்டு முதல் கனடா மற்றும் இலங்கையில் சமூகம் சார்ந்த விழிப்புணர்வை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஓகஸ்ட் 07ஆம் திகதி, திங்கட்கிழமை

# பாகிஸ்தானின் பரிதாபம்!

அரசு திறைசேரியான தோஷகானாவிடம் இருந்த பரிசுப் பொருட்களை சட்டவிரோதமாக விற்றதாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி என்று இஸ்லாமாபாத்தில் உள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பையடுத்து லாகூரில் உள்ள இல்லத்தில் இருந்த இம்ரான் கானை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த இஸ்லாமாபாத் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் நீதிபதி ஹுமாயுன் தில்வார், இம்ரான் கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடையும் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 10 இலட்சம் ரூபா அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது என்று இம்ரான் கானின் கட்சியான தெக்ரீக்-இ-இன்சாப் தெரிவித்துள்ளது. அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், " வரலாற்றில் மிக மோசமான இந்த விசாரணையில், ஒருதலைப்பட்சமாக செயற்படும் நீதிபதி, நீதியை கொலை செய்ய முயற்சித்துள்ளார், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் வழக்கில் உள்ள உண்மைகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன " - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து, இம்ரான் கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடை விதிக்கப்படுவதாக பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்தின் வழக்கறிஞர் அம்ஜத் பர்வேஸ் தெரிவித்துள்ளார்.

தோஷகானா என்பது அரசு கருவூலம். பிரதமர், ஜனாதிபதி அல்லது பிற முக்கிய தலைவர்கள் விஜயத்தின்போது அளிக்கப்படும் பெறுமதிமிக்க பரிசுகள் இங்கு வைக்கப்படுகின்றன. எந்தவொரு வெளிநாட்டுப் பயணத்தின்போதும், வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரிகள் தங்களுக்கு அளிக்கப்படும் பரிசுகள், திரும்பி வரும்போது அவை தோஷகானாவில் வைக்கப்படும்.

தோஷகானாவில் வைக்கப்படும் பொருட்கள் நினைவுப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகே இங்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களை விற்பனை செய்ய முடியும். இந்தப் பரிசுகளில் பொதுவாக விலை உயர்ந்த கடிகாரங்கள், தங்கம், வைர நகைகள், விலை உயர்ந்த ஆபரணங்கள், நினைவுப்பொருட்கள், வைரம் பதித்த பேனாக்கள், மண், பீங்கான் போன்றவற்றில் ஆன பாண்டங்கள், தரை விரிப்புகள் ஆகியவை அடங்கும்.உண்மையில், இம்ரான் கான் ஆட்சியில் இருந்தபோது வாங்கிய பரிசுப் பொருட்கள் குறித்து தேர்தல் ஆணையத்திடம் முறையான தகவல் தெரிவிக்கவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன.

பாகிஸ்தானில் பதவியை வகித்த ஒரு பிரதமரோ அல்லது ஒரு தலைவரோ சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவது இது முதல் முறையல்ல . பிரதமர்கள் சிறைக்குச் செல்லும் நீண்ட வரலாறு அங்கு உள்ளது.

பாகிஸ்தான் பிரதமரின் நாற்காலி முள் கிரீடம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது, பாகிஸ்தானின் பிரதமர் பதவி என்பது எளிதல்ல. இப்படி ஒரு பதவியில் அமர்ந்து பலர் சிறைவாசம் அனுபவித்துள்ளவர்கள் பலர். சிறைக்குச் சென்ற சில பிரபலமான தலைவர்களைப் பற்றிக் குறிப்பிட்டால் , பெனாசிர் பூட்டோ பலமுறை கைதுசெய்யப்பட்டார். இதேபோல் 1974இல் சுல்பிகார் அலி பூட்டோவும், 1999இல் நவாஸ் ஷெரீப்பும் கைதுசெய்யப்பட்டனர்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஹுசைன் ஷஹீத் சுஹ்ரவர்தி செப்டெம்பர் 1956 முதல் ஒக்டோபர் 1957 வரை பாகிஸ்தானின் பிரதமராக இருந்தார். அந்த நேரத்தில் அவர் ஜெனரல் அயூப் கானின் இராணுவச் சதிக்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டார். தேச விரோத செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விசாரணையின்றி சிறைக்கு அனுப்பப்பட்டார்.

ஓகஸ்ட் 1973 முதல் ஜூலை 1977 வரை பாகிஸ்தானின் பிரதமராக இருந்த சுல்பிகர் அலி பூட்டோ சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியிருந்தது. 1974 ஆம் ஆண்டு அரசியல் எதிரியைக் கொல்ல சதி செய்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த வழக்கில் 1977இல் கைது செய்யப்பட்டார். சில நாட்கள் சட்டச் சண்டைக்குப் பிறகு ஏப்ரல் 4, 1979 அன்று தூக்கிலிடப்பட்டார்.

பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமர் பெனாசிர் பூட்டோவும் சிறை செல்ல நேரிட்டது. பூட்டோ இரண்டு முறை பாகிஸ்தானின் பிரதமராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப், பர்வேஸ் முஷாரப் ஆட்சியில் 2007ஆம் ஆண்டு 10 ஆண்டுகள் நாடு கடத்தப்பட்டார். முன்கூட்டியே திரும்பியதற்காக கைதுசெய்யப்பட்டார். 2018 ஆம் ஆண்டில் ஊழல் குற்றச்சாட்டில் நவாஸ் ஷெரீப் மற்றும் மகள் மரியம் ஆகியோருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2018 டிசம்பரில் பாகிஸ்தானில் அதிக காலம் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப், அல்-அஜிசியா ஸ்டீல் மில் வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

2008 ஆம் ஆண்டில் யூசுப் ரசா கிலானி பாகிஸ்தானின் பல அரசியல் கட்சிகளின் கூட்டணி அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார். ஊழல் வழக்கில் அவருக்கு எதிராக கைது - பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. போலி நிறுவனங்களின் பெயரில் பணப் பரிவர்த்தனை செய்ததாக அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. அவர் சிறைக்குச் செல்லவேண்டியிருந்தது.

PML-N தலைவர் ஷாஹித் ககான் அப்பாசி ஜனவரி 2017 முதல் மே 2018 வரை பாகிஸ்தானின் பிரதமராக இருந்தார். எல்.என்.ஜி. வழக்கில் ஊழல் செய்த குற்றச்சாட்டின் பேரில் ஷாஹித் ககான் அப்பாசி தேசிய பொறுப்புக்கூறல் பணியகத்தால் (என்.ஏ.பி.) கைது செய்யப்பட்டார். பணமோசடி வழக்கில் லாகூர் உயர்நீதிமன்றம் பிணையை நிராகரித்ததை யடுத்து, பாகிஸ்தானின் தற்போதைய பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் 28 செப்டெம்பர் 2020 அன்று கைதுசெய்யப்பட்டார். சுமார் ஏழு மாதங்களுக்குப் பிறகு, அவர் லாகூரில் உள்ள கோட் லக்பத் மத்திய சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.இப்போது பாகிஸ்தானின் 22 ஆவது பிரதமர் இம்ரான் கான் ஓகஸ்ட் 5, 2023 அன்று சிறைக்குச் சென்றுள்ளார்.

முன்னதாக மே 2023 இல், அல்-காதிர் பல்கலைக்கழக அறக்கட்டளை வழக்கில் ஊழல் குற்றச்சாட்டில் இம்ரான் கைதுசெய்யப்பட்டார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்து அரசியலில் நுழைந்தவர் இம்ரான் கான். இவரது தலைமையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை வென்றது. இதனால் பாகிஸ்தானில் மட்டுமல்ல, இஸ்லாமிய நாடுகள் முழுவதும் இவருக்கு அதிகமான ரசிகர்கள் உள்ளனர். இதற்கிடையே தான் இம்ரான் கான் தெஹ்ரிக், இன்சாஃப் கட்சியை தொடங்கி அரசியல் பிரவேசம் செய்து வெற்றி பெற்று பிரதமர் ஆனார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் இம்ரான் கான் ஆட்சி பொருளாதார நெருக்கடிக்குள்ளும் முன்னோக்கிச் சென்றபோதும் அவரை பதவியிலிருந்து அகற்ற மேற்குலகம் சதி செய்தது. பாகிஸ்தானில் அதற்கு போதியளவு உதவிகளும் கிடைத்தன. இந்தியாவில் ராகுல் காந்திக்கு கிடைத்த அரசியல் ரீதியான தண்டனையை இந்திய உயர்நீதிமன்றம் தூக்கிக் கடாசியதுபோல பாகிஸ்தான் நீதிமன்றம், இம்ரான் விடயத்தில் நீதியின் பக்கம் நிற்காமல் இருப்பதன் மர்மம் புரியவில்லை. அதில் அரசியல் கலந்திருக்கிறதா என்ற சந்தேகம் எழுவதில் நியாயம் இல்லாமலில்லை.

பாகிஸ்தானின் இப்போதைய அரசியலை நோக்குகையில், அங்கு ஆட்சிக்கவிழ்ப்பொன்றுக்கான அல்லது இராணுவ ஆட்சியொன்று வரும் அபாயம் வரவும் கூடும்.அந்நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், நடந்துகொண்டிருக்கும் விடயங்கள் எரியும் நெருப்பில் ஊற்றிய எண்ணெயாகவே இருக்கின்றன.அந்நாடு உடனடியாகத் தேறும் வாய்ப்பில்லை.

# தமிழர் பாரம்பரியத்தில் அழிந்து வரும் நாட்டார் விளையாட்டுகள்

பண்டைய தமிழ் மக்களின் வாழ்வியலின் ஒரு கூறாக நாட்டார் விளையாட்டுகள் காணப்படுகின்றன. நாட்டார் விளையாட்டுகளின் அடிமுடி ஆரம்பமானதற்கு மக்களின் வாழ்வியலும் அவர்களின் தொழிலுமே அடிப்படைக் காரணமாக இருந்தன. மனிதன் தோன்றியதில் இருந்து நாட்டார் விளையாட்டுகளும் ஆரம்பமாகின. மிருகங்களை வேட்டியாடியதிலிருந்து ஈட்டி எறியும் விளையாட்டு தோற்றம் பெற்றது என நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். பொதுவாக நாட்டார் விளையாட்டுகள் ஆண் , பெண் இருபாலரும் வயது வேறுபாடின்றி நாட்டார் விளையாட்டுகளை விளையாடினார்கள். இவ் விளையாட்டுகள் புராதன காலங்களில் பல்வேறு நோக்கங்களையும் இலக்குகளையும் அடிப்படையாகக் கொண்டு விளையாடப்பட்டன. நாட்டார் விளையாட்டுகள் பொழுதுபோக்காக விளையாடப்பட்டு வந்தன.

நாம் அறிந்த நாட்டார் விளையாட்டுகளாக எட்டுக்கோடு, கிட்டிப்புள்ளு, ஊஞ்சல் ஆடுதல், மாவடி புளியடி எவடம் எவடம்,துரத்திப் பிடித்தல், ஒழித்துப் பிடித்து விளையாடல் என்பவற்றைக் கூறமுடியும். சில நாட்டார் விளையாட்டுகளை விளையாடும் போது பாடல்களையும் பாடுவர். உதாரணமாக "கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுக்கி அடிக்க பாலாறு" , "மாவடி புளியடி எவடம் எவடம்" , "சங்கிலி புங்கிலி கதவ திற" எனப் பல வகையான பாடல்களையும் பாடும் வழக்கமும் காணப்படுகின்றது. நாட்டார் விளையாட்டுகளை விளையாடும் போது ஆட்களைப் பிரித்து எடுப்பதற்காக காயா - பழமா? ,ஒற்றையா - இரட்டையா? வாய்மொழியாகக் கூறிப் பிரிக்கும் பண்பும் காணப்படுகின்றது.

நமது உடல், உழைப்பு நன்றாக இருப்பதற்கு நாட்டார் விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன. உதாரணமாக, கபடி, கிளித்தட்டு போன்ற விளையாட்டுகளை எடுத்துக் கூறலாம். நாட்டார் விளையாட்டுகள் ஒவ்வொரு மனிதனும் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தும் விளையாட்டுகளாகவும் காணப்படுகின்றது. உதாரணமாக, தாயக்கட்டை, ஆடு புலி போன்ற விளையாட்டுகளைக் கூறலாம். பொழுதுபோக்காகவும் உடல் ஆரோக்கியம் பெறுவதற்கும் உள ஆரோக்கியம் பெறுவதற்கும் சில விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன. உடல் உறுதியை அல்லது வீரத்தை எடுத்துக்காட்டுவதற்கும் முற்காலத்தில் சில நாட்டார் விளையாட்டுகள் விளையாடப்பட்டன. உதாரணமாக,



இளவ' । ங்கள், ஒரு தழுவுதல் போன்ற விளையாட்டுகளைக் கூறலாம். புத்திக்கூர்மையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளும் தொழிலோடு சம்பந்தப்பட்ட விளையாட்டுகளும் காணப்படுகிறன.

நாட்டார் விளையாட்டுகள் பற்றி Stanly Hall மற்றும் Appleton lady ஆகிய அறிஞர்கள் கருத்துகளை முன் வைத்திருக்கின்றனர். வாழ்வியலோடு இணைந்து சோர்வை அகற்றுவனவாகவும் நாட்டார் விளையாட்டுகள் காணப்படுகின்றன. ஒருவருடைய அறிவுத் திறமையை வெளிக்கொண்டு வரும் வகையிலும் இவை காணப்படுகின்றன.

நாட்டார் விளையாட்டுகளில் பாடல்களைப் பாடும்போது சிறுவர்கள் அதனை செவிமடுத்து அடுத்த சந்ததிக்கு அதனைப் பரவலடையச் செய்கின்ற வாய்மொழி தொடர்பாடல் ஆகவும் காணப்படுகின்றது. இது கல்விக்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றது. இவை இயல்பான நிலையிலிருந்து தோற்றம் பெறுவதால் பெரும்பாலும் பெரியவர்களிடம் இருந்து உள்வாங்கி கற்றுக் கொள்ளக்கூடியனவாகவும் மக்களின் உணர்வுகளுடனும் கலந்து காணப்படுகின்றது.

நாட்டார் விளையாட்டுகளில் அனைத்து மக்களும் பங்கேற்கக் கூடிய தன்மையும் விளையாட்டுப் பொருட்களை வாழும் சூழலிலே இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மையும் காணப்படுகின்றன. விளையாட்டுகள் மக்களின் வாழ்க்கை விழுமியங்கள், நம்பிக்கைகள், பண்பாடுகளை அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்தும் ஊடகமாகவும் காணப்படுகின்றது.

தற்காலத்தில் நாட்டார் விளையாட்டுகள் விளையாடுவது குறைவடைந்தே காணப்படுகிறது. சில கிராமப்புறங்களில் இவ்வாறான நாட்டார் விளையாட்டுகள் விளையாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டார் விளையாட்டுகள் அழிவடைந்து செல்லத் தற்கால நவீன உலகில் அனைத்தும் நவீன மயப்படுத்தப்பட்டமையே காரணமாகும். காலத்திற்கு ஏற்ற வாழ்க்கை முறை மாற்றம் அடைவதைப்போல விளையாட்டுகளும் மாற்றமடைந்து விட்டன. அனைவரது வாழ்க்கையும் தொலைபேசி, தொலைக்காட்சிக்கு அடிமையாகியிருப்பதனால் இவ்வாறான நாட்டார் விளையாட்டுகள் மீது நாட்டமின்மை ஏற்படுவதால் அவை மறைந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. தொலைபேசியில் online games விளையாடுவதனால் சிறுவர்கள் மோட்டார் விளையாட்டுகளை விரும்புவதில்லை.

திறன்பேசி மோகத்தினாலே இவ்வாறான கிராமிய விளையாட்டுகள் சிறுவர்கள் மத்தியில் பெரிதும் தாக்கத்தை தற்காலத்தில் ஏற்படுத்தவில்லை. இதனால் சிறுவர்களின் ஆரோக்கியமும் அவர்களின் திறன்களும் குன்றுவதோடு அவை மழுங்கடிக்கப்படுகின்றன. இன்றைய காலகட்டங்களில் தொலைபேசியில் online games ற்கு அடிமையாகி சிறுவர்கள் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவங்களும் நிகழ்ந்து வருவதை நாம் அவதானிக்கலாம். தமிழர்களுடைய கிராமிய வாழ்வு படிப்படியாக காலமாற்றத்தினால் வருகின்றன. இருப்பினும், ஒரு சில நாட்டார் விளையாட்டுகள் குறிப்பாக, எல்லே, கபடி போன்ற சில நாட்டார் விளையாட்டுகள் தற்காலத்திலும் விளையாடப்பட்டு வருகின்றமையை காணலாம். அத்தோடு, அன்று தொட்டு இன்று வரை "நாட்டார் பாடல்கள்" என்கின்ற தலைப்பில் பாடசாலைப் புத்தகங்களில் நாட்டார் பாடல்கள் என்ற தலைப்பிலும் பல்கலைக்கழகங்களில் "நாட்டாரியல்" என்ற தலைப்பிலும் நாட்டாரியலுக்கு புத்துயிர் கொடுக்கப்படுகிறது. இவற்றோடு தற்காலங்களில் குறிப்பாக, சில பிரதேசங்களில் தைப்பொங்கல், புது வருடப் பிறப்பு , சித்திரைப் புத்தாண்டு, போன்ற பண்டிகைக் காலங்களில் கயிறு இழுத்தல், மாட்டுவண்டிச் சவாரி, முட்டியுடைத்தல், சறுக்கு மரம் ஏறுதல் போன்ற விளையாட்டுகளை நடத்தி மீண்டும் அவற்றை மிளிரவைத்து புத்துயிர் அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டார் விளையாட்டுகள் இடம் தெரியாமல் அழிந்து செல்கின்ற நிலையில், அவற்றை மீள கட்டி எழுப்பி எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**சு.திலேஜா**
**ஊடகக்கற்கைகள் துறை**
**யாழ். பல்கலைக்கழகம்**

# 13 தொடர்பில் மோடி கூறியது ரணிலுக்கு விளங்கியிருக்கும்

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



**பு.கஜிந்தன்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றபோது பிரதமர் மோடி 13 தொடர்பில் கூறியது நன்கு விளங்கிருக்கும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் -பாராளுமன்ற உறுப்பினர் - நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போது, அவரது உரை எவ்வாறு இருக்கும் என ஊடகவியலாளர் விக்னேஸ்வரனிடம் கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதிலளித்த விக்னேஸ்வரன் எம்.பி., ரணிலின் உரை எவ்வாறிருக்கும் என உரையாற்றிய பின்னரே கருத்துக்கூற முடியும்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரிலே தெரிவித்துவிட்ட நிலையில், பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடு எவ்வாறு இருக்கும் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நானும் கலாநிதி விக்னேஸ்வரனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவான வரைபு ஒன்றை வழங்கிய நிலையில், அது பற்றி இந்தியப் பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி ரணில் பேசினார்.

13 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது கம்மன்பில போன்ற சிலர் முதல் ஒரு கருத்தைக் கூறுவார்கள், பிறகு ஒரு கருத்தைக் கூறிக் குழப்புவார்கள் என எமக்குத் தெரியும்.

இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட இரு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஏற்க முடியாது என எளிதில் தட்டிக் கழித்துவிட முடியாது.

இறுதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது 13 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சிலர் எதிர்க்கிறார்கள் எனக் காரணம் காட்டி பின்வாங்கக் கூடாது என அவரிடம் கூறினேன்.

அன்றைய சந்திப்பில் சிங்களத் தலைவர்கள் என்னுடன் கலந்துரையாடியபோது நான் முன்வைத்த இந்திய, பாண்டிச்சேரியில் நடைமுறையில் உள்ள பட்டன் பொல்லுடனான பொலிஸை தாங்கள் ஏற்பதாகத் தெரிவித்தனர்.

ஆனால், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அதுபற்றி என்னிடம் பேசவும் இல்லை ; ஜனாதிபதியின் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கவும் இல்லை.

பதின்மூன்று வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் உரித்துடையதல்ல, இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவான விடயம்.

நான் அறிந்த வரையில் பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொண்ட மாகாணங்களில் பொலிஸ் அதிகாரத்தை விரும்புகின்ற நிலையில், அவர்களின் கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

ஆகவே, குறித்த விடயம் தொடர்பில் இந்திய பிரதமர் கூறிய விடயங்களை ரணில் விக்கிரமசிங்க தெளிவாக உள்வாங்கியிருப்பார் என்ற நம்பிக்கையுடன் பாராளுமன்றத்தில் என்னசெய்யப்போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நக்கல் நமசிவாயம்

**பொதுஜன பெரமுனவை உடைக்க வேண்டாமென ரணிலிடம் கெஞ்சினாராம் பெசில். எப்படியிருந்த பெசில் இப்படி ஆயிட்டார்..!**



## இன்றைய நாளில்...

- **1898 – யாழ்ப்பாணம் மானிப்பாயில் டாக்டர் ஸ்கொட் தலைமையில் மானிப்பாய் மருத்துவமனை புதிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.**
- **1955 – சோனி தனது முதலாவது டிரான்சிஸ்டர் வானொலிகளை ஜப்பானில் விற்பனைக்கு விட்டது.**
- **1976 – வைக்கிங் 2 விண்கலம் செவ்வாயின் சுற்று வட்டத்துள் சென்றது.**
- **1987 – லினி கோக்ஸ் பெரிங் நீரிணையைக் கடந்து, அமெரிக்காவில் இருந்து சோவியத் ஒன்றியம் வரை நீந்திய முதல் மனிதர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.**
- **1995 – கொழும்பில் மத்திய மாகாண முதலமைச்சரின் அலுவலகத்திற்கு வெளியே குண்டு வெடித்ததில் 24 பேர் கொல்லப்பட்டனர், 55 பேர் காயமடைந்தனர்.**
- **2006 – இலங்கை சோஷலிச சமத்துவக் கட்சியின் உறுப்பினர் சிவப்பிரகாசம் மரியதாஸ் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டார்.**

# சங்கமித்தை வரவுமில்லை; அரச மரம் நடவுமில்லை!

## வெடித்தது சங்கானையில் போராட்டம்!!





■ பு.கஜிந்தன்

சுழிபுரம் - பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம் சங்கமித்தையால் கொண்டு வந்து நடப்பட்டது என சித்திரித்து வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்னால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் போராட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

"சங்கமித்தை வரவுமில்லை; அரச மரம் நடவுமில்லை; பொய்யான வர்த்தமானியை இரத்துச் செய், இந்த மண் எங்களின் சொந்த மண், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், பறாளாய் முருகன் தமிழர் சொத்து, தாயகத்தில் ஆக்கிரமிப்பு; சர்வகட்சிக் கூட்டத்தில் நல்லிணக்க நாடகம்;, இராணுவமே வெளியேறு" உள்ளிட்ட பல்வேற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கை - இந்திய ஒப்பந்தமே தமிழரை தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வைத்தது

## வேந்தர் பத்மநாதன் தெரிவிப்பு

இலங்கை - இந்திய ஒப்பந்தமே தமிழரை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வைத்ததோடு வடக்கு, கிழக்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வதிவிடமாக ஏற்றுக்கொள்ள வைத்தது என யாழ். பல்கலைக்கழக வேந்தரும் முன்னாள் வரலாற்று பேராசிரியருமான எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1972 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், இலங்கை - இந்திய உடன்படிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலம் சிங்களத்தோடு ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை பலருக்குத் தெரியாது.

இலங்கை - இந்திய உடன்படிக்கை வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பதிவிட இடம் என்பதைப் பதிவு செய்த நிலையில், சாணக்கியமாகவும் இராஜதந்திர முறையிலும் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை ஒப்புக்கொள்ள வைத்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைப் பற்றி பேசுபவர்களை சிலர் துரோகிகள் என்கிறார்கள். இரு அரசுகளால் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையை துரோகமானது என எவரும் கூற முடியாது. அவ்வாறு கூறுபவர்களுக்கு வரலாறு தெரியாமல் இருந்திருக்கலாம்.

இலங்கை இனப்பிரச்சினை ஜே.ஆர். காலத்தில் மோசமான நிலையை அடைந்து விட்ட நிலையில், உரிய நேரத்தில் கேட்பவற்றைக் கேளாமையும் கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறவிட்டதுமே பிரச்சினை புரையோடுவதற்கு காரணமாக அமைந்தன.

தமிழர்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கான உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் எமது தலைமைகள் உணர்வுடன் சிந்திக்காமல் கொழும்பை மையமாகக் கொண்டு வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளை அணுகியமையும் ஒரு காரணம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் 1944 ஆம் ஆண்டு சிங்களமும் தமிழும் நாட்டின் ஆட்சி மொழிகள் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் 1947 ஆம் ஆண்டு நிலைமை மாறிவிட்டது.

1947 ஆம் ஆண்டு பிரித்தானியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்ததன் மூலம் மலையக மக்களின் குடியுரிமை - வாக்குரிமையை பறிப்பதற்கான சட்டத்தை இயற்றிய நிலையில்,



சுமார் ஒன்பது இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.

1956 ஆம் ஆண்டு அரசியலமைப்பை மாற்றி சிங்களம் மற்றும் அரசகரும மொழியாக சட்டம் இயற்றப்பட்ட நிலையில், தமிழ் மொழிக்காக மக்கள் சாத்வீகப் போராட்டங்கள் பல செய்ததன் பயனாக 1958 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க தமிழ் மொழியையும் அரச கரும மொழியாக பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றினார்.

அதன் பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக தமிழ் - ஆங்கிலம் - சிங்களம் ஆகியன சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

வரலாறுகளைத் தெரியாதவர்கள் வரலாறுகளைத் தெரிந்துகொள்வதுடன் ஏற்கனவே விட்ட வரலாற்றுத் தவறுகளை இனியும் விடாமல் பயணிக்க வேண்டும். ஆகவே, 25 நாடுகள் சேர்ந்து எமது போராட்டத்துக்கு முடிவுகட்டிய நிலையில், போராளிகளையும் மக்களையும் இழந்த நாம் இனியும் பிழையான வழிகளைப் பின்பற்றாமல் மக்களுக்காக தலைமைகள் பயணிக்க முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பலம் குன்றி இருக்கும் எம்மீது ஏறி சவாரி செய்ய நினைக்கிறார்கள்!

## முன்னாள் எம்.பி. சரவணபவன் காட்டம்

■ சாவகச்சேரி நிருபர்



ஒரு காலத்தில் வல்லமையுடன் இருந்த நாம் இன்று பலம் குன்றி இருக்கிறோம். அதனாலேயே எம்மீது ஏறி சவாரி செய்ய நினைக்கிறார்கள் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தையின் வரவுடன் தொடர்புபட்டதாக சித்திரித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம் ஆலயம் வந்த பின்னரே வந்தது. அதற்கான சான்றுகள் ஆலய நிர்வாகத்தினரிடம் உள்ளன. இதனை அரசாங்கம் உணர்ந்து வெளியிட்டுள்ள வர்த்தமானியை உடனடியாக மீளப் பெறவேண்டும்.

இராணுவத்தினர் தொல்லியல் திணைக்களத் தினருக்கு தெரியப்படுத்தி எவருக்கும் தெரியாமல் சூட்சுமமான முறையில் இந்த பௌத்தமயமாக்கல் செயற்பாட்டை முன்னெடுத்திருக்கின்றனர். கடந்த பெப்ரவரி மாதம் இந்த வர்த்தமானி பிரசுரிக்கப் பட்டுள்ள போதிலும் இது தொடர்பாக எவருமே அறிந்திருக்கவில்லை.

பௌத்த அடையாளங்களை வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்தி இதனை பௌத்தர்கள் வாழ்ந்த இடமாக நிரூபிப்பதே அவர்களுடைய நோக்கம். அதற்கு முப்படையினரும் துணை போகின்றனர்.

நாம் ஒற்றுமையாக ஒன்றிணைந்து எதிர்ப்புகளைக் காட்ட வேண்டும். இந்த இனத்தை அழிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

எங்கள் கலாசாரத்திலும்-சமயத்திலும் கை வைத்துள்ளார்கள். இதனைக் கருத்திற்கொண்டு சகல தமிழ் மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

தற்போது எமது பலம் குன்றியுள்ள நிலையில், போராட்டத்தைத் தவிர வேறு வழிகளில் எம் பலத்தைக் காட்ட முடியாமல் உள்ளது. எமது போராட்டங்களை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும். போராட்டத்தின் காரணத்தை அவர்கள் ஆராய வேண்டும். ஆனால், சர்வதேசமோ மறைமுகமாக இணைந்து செயற்படுங்கள் என்று தெரிவிக்கிறார்கள். என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் - மர்யம் மன்சூர் சந்திப்பு; பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவுவதாக உறுதி



■ சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் உமர் பாறுக் புர்கி, முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வியும் சமூக செயற்பாட்டாளருமான கிழக்கின் மகள் மரியம் மன்சூர் நளீமூதீனிடம் உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் அண்மையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்முனைப் பிராந்தியத்தின் பல தேவைகள் குறித்தும் அங்குள்ள பாடசாலைகளின் அவசர தேவைகள், குறைபாடுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் சட்டத்தரணி மரியம் மன்சூர் இதன்போது பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

இதையடுத்து கல்முனையிலுள்ள இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம் உள்ளிட்ட சில பாடசாலைகளுக்கு கணினித் தொகுதிகளையும் விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்கான உபகரணங்களையும் அவசரமாக வழங்குவதாகவும் எதிர்காலத்தில் நீண்ட பல வேலைத்திட்டங்களைச் செய்வதற்கு உதவுவதாகவும் உயர்ஸ்தானிகர் உறுதியளித்துள்ளார்.

இப்பாடசாலையும் அது அமைந்துள்ள நகரமும் பாகிஸ்தான் நாட்டின் தலைநகரின் நாமத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பதையிட்டு உயர்ஸ்தானிகர் இதன்போது மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். மேலும், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கு சூட்டப்பட்ட 'Daughter of the East' - கிழக்கின் மகள் என்ற அதே மகுடத்தை மர்யம் மன்சூர் பெற்றிருப்பதானது இறைவனின் அருட்கொடை என்று கூறி உயர் ஸ்தானிகர் பாராட்டுத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது பரஸ்பரம் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்ட இருவரும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல், சமூக, கல்வி, கலாசார, பொருளாதார விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

# அகலவத்த பலாந்த முஸ்லிம் வித்தியாலயத்தில் திறப்புவிழா

■ பேருவளை நிருபர்

அகலவத்த, பலாந்த முஸ்லிம் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட "சப்ரினா யூசுப் நினைவு மண்டபம்" 2023 ஓகஸ்ட் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு மாணவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

எக்ஸ்போ லங்கா வியாபார குழுமத்தின் பணிப்பாளர் சைபுல்லா யூசுபினால் அறுபது இலட்சம் ரூபா செலவில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதிபர் முஹம்மத் வஸீர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எக்ஸ்போ லங்கா வியாபார குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அல்ஹாஜ் ஹனீப் யூசுப், பனிப்பாளர் அல் ஹாஜ் சைபுல்லா யூசுப், மத்துகம வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரேமா விஜேதுங்க, பிரதேச கல்விப் பணிப்பாளர், திருமதி அனுஷ்கா கங்காணம், கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வீடொன்றில் கொள்ளை! பில்லேவெலயில் சம்பவம்

புத்தல, பில்லேவெல பிரதேச வீடொன்றில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக புத்தல பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் உரிமையாளர் வேலைவாய்ப்புக்காக இத்தாலிக்கு சென்றுள்ள நிலையில், அதனைப் பராமரிப்பதற்காக பல்வத்தை சீனித் தொழிற்சாலையில் தொழில்புரியும் 53 வயதான கூலித் தொழிலாளி ஒருவர் இரவுநேர காவல் கடமைக்காக அமர்த்தப்பட்டிருந்தார்.

இதற்கிணங்க குறித்த காவலாளி பகல்வேளையில் நிறுவனத்தில் வேலை செய்து விட்டு இரவில் வீட்டுக் காவலில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், பணிகளை முடித்துவிட்டு குறித்த வீட்டில் இரவு தங்கியிருந்து மறுநாள் வேலைக்குச் சென்று மதியம் வீடு திரும்பியுள்ளார். இதன்போது, வீட்டின் முன்பக்கக் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் புத்தல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# காஷ்மீர் கறுப்பு தினம்

## ஐ.நா. காரியாலய முன்றிலில் காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பு போராட்டம்









■ நூருல் ஹுதா உமர்

காஷ்மீர் கறுப்பு தினத்தை முன்னிட்டு காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பு நடத்திய போராட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு காரியாலயத்தின் முன்னாலும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய முன்றிலிலும் சனிக்கிழமை (05) இடம்பெற்றது.

இப்போராட்டம் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான கலீலுர் ரஹ்மான், முஸம்மில் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும் ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீர் மக்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதையும் போராட்டக்காரர்களின் பதாகைகள் சுட்டிக்காட்டியிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இவ்விடயத்தில் தலையிட்டு இரு நாடுகளுக்குமிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து வைக்க வேண்டும்; சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்துக்கு நீதி கிடைக்கவேண்டும்; காஷ்மீர் மக்களின் பிரச்சினை உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கவேண்டும்; ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பவற்றை வலியுறுத்தியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா

■ எம்.எஸ்.எம்.முன்தஸிர்

பாணந்துறை அல் -பஹ்றியா தேசிய பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் இன்று (7) திங்கட்கிழமை காலை கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.ரிஸான் தலைமையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் களுத்துறை வலய கல்விப் பணிப்பாளர் ஏ.யூ.விக்ரமராச்சி பிரதம அதிதியாகவும் மேல்மாகாண கல்வித் திணைக்கள தமிழ் மொழி பாடசாலைகளுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.நஜீப் கௌரவ அதிதியாகவும் களுத்துறை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எஸ்.ஜெயகுமார் மற்றும் எம்.ரீ.எம்.இல்யாஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# போதைப்பொருள் - பாதாள குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த விசேட குழு

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய 8 பேர் அடங்கிய விசேட பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் உத்தரவுக்கமைய இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் தலைமையகம் மற்றும் அமைச்சுக்கு அறிக்கை சமர்பிக்க மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இந்த 8 பேர் அடங்கிய விசேட பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மேல் மாகாணத்துக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.எம்.டபிள்யூ.டி. தென்னகோன், வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பி.எம்.குணரத்ன, தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.சி. மெதவத்த, சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி டபிள்யூ.எஸ்.இ.ஜெயசுந்தர, குற்றப் புலனாய்வுத் திணைக்கள பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.பி. ரணசிங்க, போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஓஷான் ஹேவாவிதாரண மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.சி.ஏ. தனபால, கொழும்பு குற்றப் பிரிவுப் பணிப்பாளர் என். சில்வா ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.08.04 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5196 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,723,672.00 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 8 7 8 2 0 7

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3438 — சீட்டிழுப்பு திகதி 2023.08.04 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,492,076.00 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 07 08 14 72 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி பபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 29542

**லக்கி 7** — திகதி 04.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0022 — வெற்றி இலக்கினம் விருச்சகம் — வெற்றி இலக்கங்கள் 2 8 7 0 6 0 — L7 இலக்கம் 1 2 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.10,514,715.68

**தன நிதானய** — திகதி 2023/08/04 — சீட்டிழுப்பு இலக்கம் 1226 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,292,840.80 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 11 26 51 75 — விசேட எழுத்து R — லக்ஷபதி Double Chance இலக்கம் 29333

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-08-04 — சீட்டிழுப்பு இலக்கம் 505 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,278,589.40 — வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 18 32 56 58 — விசேட இலக்கினம் மிதுனம்

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1544 — 04/08/2023 — 12750 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.403,161,852.00 — ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 09 36 49 60 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனிக்கிழமை 2023.08.05 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5197 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,768,152.00 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 0 9 9 4 1 1

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3439 — சீட்டிழுப்பு திகதி 2023.08.05 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,492,076.00 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 10 39 43 77 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 16275

**லக்கி 7** — திகதி 05.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0023 — வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 3 3 4 6 2 1 — L7 இலக்கம் 1 3 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.10,538,513.60

**தன நிதானய** — திகதி 2023/08/05 — சீட்டிழுப்பு இலக்கம் 1227 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,493,456.00 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 21 33 65 75 — விசேட எழுத்து L — லக்ஷபதி Double Chance இலக்கம் 45620

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-08-05 — சீட்டிழுப்பு இலக்கம் 506 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,302,179.80 — வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 18 23 41 53 — விசேட இலக்கினம் சிம்மம்

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1545 — 05/08/2023 — 73302 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.403,256,520.00 — ஆங்கில எழுத்து O — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 13 47 53 73 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# முருகன் ஆலயம் தொடர்பான வர்த்தமானிக்கு எதிராக யாழ்.பல்கலை மாணவர்கள் ஊர்வலமாக போராட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை சுழிபுரத்தில் போராட்டமொன்று இடம்பெற்றது.

போராட்டத்தைத் தொடர்ந்து சுழிபுரம் சந்தியில் இருந்து பறாளை முருகன் ஆலயத்தை நோக்கி பேரணி பயணித்தது.

யாழ்ப்பாணம் – சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி மீளப்பெறப்படவேண்டும் எனத் தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டத்தின் போது தொல்லியல் திணைக்களத்திற்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பதாகைகளையும் போராட்டகாரர்கள் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மத குருமார்கள், சைவ அமைப்புகள், சிவில் அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## தொடருந்து மோதி பெண் உயிரிழப்பு

*பு.கஜிந்தன்*

யாழ்ப்பாணம், புங்கன்குளம் தொடருந்து நிலையத்துக்கருகில் தொடருந்தில் மோதி இளம் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுமுன்தினம் (05) கொழும்பு நோக்கிச் சென்ற தொடருந்தில் மோதியே குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த திலீபன் பிரியா (வயது 27) எனும் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

எனினும், பெண்ணின் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கந்தரோடையில் கி.பி. 1ஆம் நூற்றாண்டு காலப்பகுதி லட்சுமி நாணயங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், கந்தரோடையில் தமிழ் - பௌத்த எச்சங்களின் மீது, தற்போது அமைக்கப்பட்டுள்ள சிங்கள பௌத்த விகாரைப் பகுதிக்கு அண்மையாக முன்னெடுக்கப்பட்ட தொல்பொருள் அகழ்வின் போது லட்சுமி நாணயங்கள் 5 மீட்கப்பட்டுள்ளன. அவற்றுடன் ரோமன் நாணயங்களும் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் தொல்பொருள் நிறுவனத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான ஆராய்ச்சி இணைப்பாளர், இலங்கையின் புதிய கூட்டத்திட்ட இணைப்பாளர் கலாநிதி அரெய்ன் டி சாக்சே, கலாநிதி நிமால் பெரேரா, இலங்கை தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து இந்த அகழ்வுப் பணியை ஒரு மாதமாக முன்னெடுத்து வருகின்றனர்.



இந்த நிலையிலேயே கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்கும் 3ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் என்று நம்பப்படும் லட்சுமி உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் ஐந்தும், ரோம நாணயங்கள் சிலவும் கடந்த வாரம் மீட்கப்பட்டுள்ளன.

வடக்கில் தமிழ் - பௌத்தம் நிலவிய காலப்பகுதியில் கந்தரோடையிலும் விகாரை அமைக்கப்பட்டு தமிழர்கள் வழிபட்டிருந்தனர். இருந்தாலும், தற்போது பிக்குகளின் செல்வாக்கின் கீழான தொல்லியல் திணைக்களம், கந்தரோடையில் விகாரையே இருந்தது எனக் கூறிவந்த நிலையில், அந்தப் பகுதியில் இருந்து இந்து தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன.

1917 ஆம் ஆண்டு கந்தரோடையில் கள ஆய்வு மேற்கொண்ட போல் பீரிஸ் இவ்வகை நாணயங்களைக் கண்டுபிடித்து அதில் உள்ள பெண் உருவம் தாமரை மலரில் நிற்பதுபோல் பொறிக்கப்பட்டுள்ளதை ஆதாரமாகக் காட்டி அதற்கு லட்சுமி நாணயம் என முதல் முதலாகப்பெயரிட்டிருந்தார். அவரால் இடப்பட்ட பெயரே இன்றுவரை பயன்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாண கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்விலும் இவ்வகை நாணயங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 228 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் மடக்கிப் பிடிப்பு

## வட்டுக்கோட்டை மக்கள் நடவடிக்கை







வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை பகுதியில் வைத்து கேரளக் கஞ்சாவுடன் 31 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நள்ளிரவு வேளை வட்டுக்கோட்டை மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த இருவர் உட்பட மூவர் இவ்வாறு கஞ்சாவை எடுத்துச் செல்லும்போது சந்தேகமான முறையில் வீதியில் சென்ற கையேஸ் வாகனத்தை வட்டுக்கோட்டை - பொன்னாலை பகுதி மக்கள் வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது வாகனத்தில் 227 கிலோ 918 கிராம் எடையுள்ள கஞ்சா இருப்பது அவதானிக்கப்பட்டது. இதன்போது வாகனத்தில் இருந்த எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த இருவர் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்நிலையில், அவ்வழியே வந்த கடற்படையினருக்கு மக்கள் விடயத்தைத் தெரியப்படுத்தினர். அவர்கள் கஞ்சாப் பொதிகள் மற்றும் வாகனம் என்பவற்றுடன் சந்தேகநபரைக் கைது செய்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வட்டுக்கோட்டை பகுதி மக்களின் இந்த முன்மாதிரியான துணிகர செயற்பாட்டைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வெப்பமான காலநிலை நிலவுவதால் நீரை அதிகளவில் பருகக் கொடுங்கள்

## குழந்தை வைத்திய நிபுணர் அருள்மொழி தெரிவிப்பு



வட மாகாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை ஏற்பட்டுள்ள நிலையில், சிறுவர் மற்றும் குழந்தைகளுக்கு சுத்தமான நீரை அதிகம் பருகுவதற்கு வழங்குமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கே. அருள்மொழி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் தற்போது சூழல் வெப்பநிலை வழமையை விட அதிகரித்துள்ள நிலையில், குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் உடல் ஆரோக்கியம் தொடர்பில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

குறித்த காலப் பகுதியில் குழந்தைகள்,சிறுவர்களுக்கு அதிக வியர்வை ஏற்படுவதுடன் உடலில் பருக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

இவ்வாறு பருக்கள் ஏற்படும் போது உடலை சுத்தமாக வைத்திருக்காவிட்டால் கிருமித் தொற்றுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ள நிலையில், பெற்றோர்கள் சிறுவர்கள், குழந்தைகளின் உடல் சுத்தத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

தோலில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உரிய வைத்திய ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

ஆகவே, வெப்பமான காலநிலையை எதிர்கொள்வதற்கு குடிநீரை அதிகம் பருகுவதுடன் கிருமி நாசினிகள் பாவிக்காத பழவகைகளை உண்ணுவது சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.





***சிறார்களின் திறன்களை விருத்தி செய்யும் முகமாக வேள்ட்விஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 04/08 வெள்ளிக்கிழமை பிற்பகல் தென்மராட்சி-உசன் கிராமத்தில் சிறுவர்களின் உற்பத்திப்பொருட் கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது. வேள்ட்விஷன் நிறுவன தென்மராட்சி இணைப்பாளர் ஷெரோன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் இ.சர்வேந்திரன் கலந்து கொண்டு நாடா வெட்டி உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியை ஆரம்பித்து வைத்திருந்தார். ( சாவகச்சேரி நிருபர்)***

# புலமைப்பரிசில் வழங்கி வைப்பு



*தலவாக்கலை நிருபர்*



ஆசிரியர் விடுதலை முன்னணி அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் (5) சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வுகள் அதன் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தலைமையில் நடைபெற்றன. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, விசேட அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேஸ்ராஜ் மற்றும் ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன், அதன் தலைவர் சிவாநந்தன், பொருளாளர் வி.கங்காதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேஸ்ராஜ் ஆகியோர் ஆசிரியர் விடுதலை முன்னியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ். நாதனினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# இரத்தினபுரியில் 1,42,939 குடும்பங்கள் அஸ்வெசும நிவாரணம் பெறத் தகுதி

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

இரத்தினபுரி மாவட்டத்தில் 92,838 குடும்பங்கள் வசதியற்றனவாக வாழ்கின்றன என இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் வசந்த குணரத்தின கடந்த வெள்ளிக்கிழமை (04) தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க, இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள ஆகியோரின் இணைத்த லைமையில் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (04) இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இரத்தினபுரி மாவட்டத்தில் 34,20,027 குடும்பங்கள் வாழ்கின்றன. இவற்றில் 1,42,939 குடும்பங்கள் அஸ்வெசும நிவாரண உதவி பெறத் தகுதி பெற்றுள்ளன.

இம்மாவட்டத்தில் 69 வீதமான 2,46,850 குடும்பங்கள் அஸ்வெசும நிவாரண உதவி பெறுவதற்காக விண்ணப்பத்திருந்த நிலையில், 95,912 குடும்பங்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க 2,500 ரூபா நிவாரண உதவி பெற 25,102 குடும்பங்களும் 5, 000 ரூபா நிவாரண உதவி பெற 21,919 குடும்பங்களும் 8,500 ரூபா நிவாரண உதவி பெற 58,793 குடும்பங்களும் 15,000 ரூபா நிவாரண உதவி பெற 34,045 குடும்பங்களும் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சொக்கலேட்டுக்குள் மனித விரலுடன் நகம்

*ராமு தனராஜா, பதுளை நிருபர்*



மஹியங்கனை வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலையில் சொக்கலேட்டினுள் மனித விரல் ஒன்று நகத்துடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மஹியங்கனை பொது வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர் ஒருவரினால் வைத்தியசாலைச் சிற்றுண்டிச் சாலையில் பெறப்பட்ட சொக்கலேட்டினுள்ளேயே இவ்வாறு மனித விரல் ஒன்று காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை சுமார் 3.00 மணியளவில் மஹியங்கனை வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலையில் வைத்தியசாலையின் சிற்றூழியர் ஒருவர் சொக்கலேட் ஒன்றை வாங்கி உண்ணும் போது மிகவும் கடினமான முறையில் வாயில் ஏதோ கடிபட்டதைத் தொடர்ந்து அதைக் கழுவிப் பார்த்த போது நகத்துடன் கூடிய விரல் பகுதி ஒன்று காணப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின் உயரதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து இது தொடர்பான விசாரணைகளை மஹியங்கனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

# கதிர்வேலாயுத சுவாமி ஆலய வசந்தகால உற்சவப் பெருவிழா

*பதுளை நிருபர்*

பதுளை ஸ்ரீமாணிக்க விநாயகர் கதிர்வேலாயுத சுவாமி ஆலய வசந்தகால அலங்கார உற்சவம் மற்றும் இரதோற்சவ பவனிப் பெருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி மயூர கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டெம்பர் முதலாம் திகதி பிராயச்சித்த அபிஷேகம் மற்றும் வைரவர் மடையுடன் நிறைவுபெறவுள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதி பால்குட பவனி, சங்காபிஷேகம், 30ஆம் திகதி இரதோற்சவ பவனி, 31ஆம் திகதி தீர்த்தோற்சவம், மாவிளக்குப் பூஜை, பூங்காவனம் ஆகிய விசேட நிகழ்வுகள் இடம்பெற்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி பிராயச்சித்த அபிஷேகம் மற்றும் வைரவர் மடையுடன் அலங்கார உற்சவம் நிறைவுபெறும்.

செப்டெம்பர் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையிலான ஐந்து தினங்களில் விசேட உபயங்களும் நடைபெறும்.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பால லெச்சுமனக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் குழுவினரால் மேற்படி உற்சவப் பெருவிழா இடம்பெறும்.

ஆலய தர்மகர்த்தா க. குமாரநாயகம் மற்றும் ஆலய பரிபாலன சபையினரால் மேற்படி உற்சவப் பெருவிழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நெற்செய்கைக்கு குளம் பயன்படுத்தும் போர்வையில் இரத்தினக்கல் அகழ்வுக்கு முயற்சி தீவிரம்

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

நெற்செய்கைக்காகக் குளத்தைப் பயன்படுத்தும் போர்வையில் இரத்தினக்கல் அகழ மேற்கொள்ளப்பட்ட தீவிர முயற்சிக்கு இரத்தினபுரி இணைப்புக்குழுக் கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.மேற்படி அனுமதியை இரத்துச் செய்யக்கோரி இரத்தினபுரி இணைப்புக் குழுக் கூட்டத்தில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க, இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள ஆகியோரின் இணைத் தலைமையில் வெள்ளிக்கிழமை(04) இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, குருவிட்ட பொடிவெவ குளத்தின் நீரால் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கெனக்கூறி இக்குளத்தைத் தோண்டி சுத்தம் செய்வதற்கு இப்பிரதேசத்தில் உள்ள ஒரு குழுவினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை காலமும் இக்குளத்தைப் பயன்படுத்தி எவரும் நெற்செய்கை மேற்கொள்ளவில்லை. இந்நிலையில், திடீரெனக் குளத்தைத் தோண்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது குளத்தில் உள்ள இரத்தினக்கல் கனிய மண்ணைப் பெற்று இரத்தினக்கல் அகழ்வதற்காகும்.

இவை தொடர்பில் இணைப்புக்குழுக் கூட்டத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை அடுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவிடயமாக இங்கு உரையாற்றிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் என கணிசமானோர் இக்குளத்தைத் தோண்டுவதற்கு வழங்கப்பட்டுள்ள முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தமையினால் குளத்தைத் தோண்டுவதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை இரத்து செய்வதாகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உலக செய்திகள்

# பாகிஸ்தான் ரயில் விபத்து: 28 பேர் பலி; 50 பேர் காயம்





பாகிஸ்தானில் இடம்பெற்ற ரயில் வித்தில் சிக்கி 28 பேர் உயிரிழந்துள்ளதுடன் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கராச்சியிலிருந்து அபோதாபாத் நகருக்கு சென்று கொண்டிருந்த ஹஜாரா எக்ஸ்பிரஸ் ரயில், நவாப்ஷா நகரின் ஷகாரா ரயில் நிலையம் அருகே சென்றுகொண்டிருந்தபோது தடம்புரண்டுள்ளது. இதில் 08 பெட்டிகள் கவிழ்ந்தன.

இந்த சம்பவத்தில் 28பேர் உயிரிழந்துள்ளதுடன் (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை) 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புப் படையினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். காயமடைந்தோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# சீனாவில் 5.5 ரிச்டர் நிலநடுக்கம்: 126 கட்டடங்கள் சேதம்; 21 பேர் காயம்

சீனாவில் நேற்று அதிகாலை 5.5 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 126 கட்டடங்கள் இடிந்து சேதமடைந்துள்ள நிலையில் இடிபாடுகளில் சிக்கி 21 பேர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான், காஷ்மீர், டில்லி போன்ற இடங்களில் நேற்றுமுன்தினம் நில அதிர்வுகள் உணரப்பட்ட நிலையில் அண்டை நாடான சீனாவின் ஷாண்டோங் மாகாணத்தில் நேற்று அதிகாலை இரண்டரை மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

பூமிக்கடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.5 என பதிவாகியுள்ளது. 126 கட்டடங்கள் இடிந்து சேதமடைந்துள்ள நிலையில் இடிபாடுகளில் சிக்கி 21 பேர் காயமடைந்தனர் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இம்ரான்கான் சிறையிலடைப்பு

## 03 ஆண்டுகள் தண்டனை; 05 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிடத் தடை

## நாடு தழுவிய போராட்டங்களை நடத்தப்போவதாக பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி அறிவிப்பு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதையடுத்து, அவருடைய பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி நாடு தழுவிய போராட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

தோஷகானா வழக்கில் இம்ரான் கானுக்கு வழங்கப்பட்ட தண்டனையை இரத்துச் செய்யக் கோரி மறு ஆய்வு மனுவை அவசர வழக்காக விசாரிக்கக்கோரி இம்ரான்கானின் கட்சி தாக்கல் செய்துள்ளது.

அரசுக்குரிய பரிசுப் பொருட்களை சட்டவிரோதமாக விற்றதாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரானுக்கு 03 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து இஸ்லாமாபாத் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன் அடுத்த 05 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடவும் தடை விதித்துள்ளது.

இதனிடையே பலத்த பாதுகாப்புடன் இம்ரான் கான் இஸ்லாமாபாத் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் பிரதமராக இருந்தபோது பெற்ற பரிசுப் பொருட்களை கருவூலத்தில் ஒப்படைக்காமல் விற்பனை செய்ததாக அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு 03 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்த நீதிபதி, அடுத்த 05 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடவும் தடை விதித்தார். இதனால் இம்ரான் கான் தனது எம்.பி. பதவியை இழப்பதுடன், நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த ஊழல் வழக்கு தொடர்பான வழக்கு இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் இம்ரான்கான் குற்றவாளி என நேற்றுமுன்தினம் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், அவருக்கு 03 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இதையடுத்து, இம்ரான் கானை பொலிஸார் வீடுபுகுந்து கைது செய்தனர். அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், வீதிகளில் இறங்கி போராடும்படி ஆதரவாளர்களுக்கு இம்ரான் கான் அழைப்பு விடுத்துள்ளார். கைது நடவடிக்கைக்கு முன்னதாக இம்ரான் கான் பேசிய வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில்,

''என் பாகிஸ்தானியர்களே இந்த தகவல் உங்களை அடையும்போது நான் சிறை சென்றிருப்பேன். நீங்கள் வீட்டில் அமைதியாக இருக்கவேண்டாம் என்பதே என் ஒரே வேண்டுகோள்.

நான் கடினமான சூழ்நிலையை சந்திப்பது எனக்காக அல்ல, உங்களுக்காகத்தான், உங்கள் தலைமுறைக்காகத்தான். உங்கள் உரிமைக்காக நீங்கள் போராடாமல் அடிமை வாழ்க்கை வாழ்ந்தால் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அடிமைகளுக்கு என்று சொந்த வாழ்க்கை இல்லை. அடிமைகள் நிலத்தில் உள்ள எறும்பு போன்றவை. அவைகள் அதிக உயரத்தை எட்டாது. இது நீதிக்கான, உங்கள் உரிமைக்கான, சுதந்திரத்துக்கான போராட்டம். சுதந்திரத்தை யாரும் உங்கள் தட்டில் வைக்கமாட்டார்கள். உங்கள் உரிமையை பெறும்வரை நீங்கள் தொடர்ந்து போராடுங்கள், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசு உங்களின் மிகப்பெரிய அடிப்படை உரிமையாகும்'' - எனத் தெரிவித்துள்ளார்.

# பூமிக்கு முதல் தகவலை அனுப்பியது சந்திரயான்-3




நிலவின் தென் துருவத்தை ஆராய்வதற்காக இஸ்ரோவால் அனுப்பப்பட்ட சந்திரயான்-3 விண்கலம் பூமிக்கு முதல் தகவலை அனுப்பியுள்ளது.

ஜூலை 14ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான்-3 விண்கலம், புவியின் சுற்றுவட்ட பாதையில் 05 கட்டங்களாக உயர்த்தப்பட்டது. புவி வட்டத்தின் இறுதி சுற்றுப்பாதையை நிறைவு செய்த சந்திரயான்-3 விண்கலம், ஓகஸ்ட் முதலாம் திகதி நிலவின் நீள் வட்டப் பாதையை நோக்கிய பயணத்தை தொடங்கியது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு 7.15 மணியளவில் நிலவின் சுற்றுவட்டப்பாதைக்குள் சந்திரயான் - 3 வெற்றிகரமாக உந்தித்தள்ளப்பட்டது. இதன் அடுத்தகட்டமாக நிலவின் சுற்றுப்பாதையை படிப்படியாக குறைக்கும் நடவடிக்கை நேற்று இரவு 11 மணிக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதனிடையே, நிலவின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்துள்ள சந்திரயான் 3 விண்கலம், சந்திர ஈர்ப்பு விசையை உணருவதாக முதல் தகவலை அனுப்பியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 23ஆம் திகதி, நிலவின் மேற்பரப்பில் சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் கருவியை சொஃப்ட் லேண்டிங் செய்ய இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் நவல்னிக்கு 19 ஆண்டுகள் சிறை

## உடனடியாக விடுதலை செய்யுமாறு ஐ.நா. வலியுறுத்து

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை கடுமையாக விமர்சித்துவந்த எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு மேலும் 19 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நிதி மோசடி வழக்கில் பதினொன்றரை ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அரசுக்கு எதிராக கிளர்ச்சியை ஏற்படுத்தி, அமைதியை சீர்குலைக்க



முயற்சிப்பதாக குற்றம்சாட்டி, மேலும் 19 ஆண்டுகள் தண்டனை விதித்து ரஷ்ய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனை கடுமையாக கண்டித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது.

# கட்டடக் கலைகளின் தரத்தை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு





இலங்கையை உலக அரங்குக்கு கொண்டுச் சென்ற பிரசித்தமான நிர்மாணங்களான ருவன்வெலிசாய, அபயகிரிய, ஜேதவனாராமய உள்ளிட்ட நிர்மாணங்கள் ஊடாக இந்நாட்டு கலைஞர்கள் உருவாக்கிய தரத்தை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு அவசியமான வசதிகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்கால காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு உகந்ததான கட்டிட நிர்மாணங்கள் இலங்கைக்கு அவசியப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு சினமன் கிரேண்ட ஹோட்டலில் நேற்றுமுன்தினம்(05) இடம்பெற்ற கட்டடக் கலைஞர்களின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கட்டிக்கலை: நிலைப்புக்கான தாக்கம்” என்ற தொனிப்பொருளின் கீழ், பிரித்தானிய கட்டிடக்கலைஞர்களின் றோயல் நிறுவனமான (RIBA) இலங்கையின் அமெரிக்க வாஸ்து சாஸ்த்திர நிறுவனம் (AIA) இலங்கைக்கான இத்தாலி தூதரகம் ஆகியன இணைந்து மேற்படி சர்வதேச மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்ததோடு, 350க்கும் மேற்பட்ட இலங்கை, தெற்கு மற்றும் தென்கிழக்காசிய கட்டடக்கலைஞர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் கட்டடக்கலைஞர்களால் பல வருடங்கள் நிலைக்கக்கூடிய நிர்மாணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை கட்டடக்கலை வரலாற்றினை பார்க்கும் போது பெருமை மிக்க சின்னங்கள் பல எமக்கு இருக்கின்றன. ருவன்வெலிசாய, அபயகிரிய, ஜேதவனாராமய உள்ளிட்ட நிர்மாணங்கள் இலங்கையை உலக அரங்குக்கு கொண்டுச் சென்ற நிர்மாணங்களாகும்.

சீகிரியா இந்நாட்டின் பிரமிக்கத்தக்க அதேபோல் வாஸ்து சாஸ்திரத்துக்கு அமைவான நிர்மாணமாகும். பொலன்னறுவையில் காணப்படும் பிரமிக்கத்தக்க நிர்மாணங்களும் 2000 வருட வரலாற்று பாரம்பரியத்தை கொண்டவையாகும்.

அதேபோல், 19ஆம் நூற்றாண்டின், கண்டி திரித்துவக் கல்லூரி ஷெபல் அரங்கம், களனி விகாரை, லேக் ஹவுஸ் கட்டிடம், பேராதனைப் பல்கலைக்கழகம், சுதந்திர சதுக்கம், ஜெப்ரி பாவா நிர்மாணித்த இலங்கை பாராளுமன்றம் ஆகியனவும் இலங்கையின் பிரமிக்கத்தக்க படைப்புகளின் சிலவாக விளங்குகின்றன.

கடந்த இரு வருடங்களில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் கட்டிட நிர்மாணத்துறையும் பாதிப்புகளை எதிர்கொண்டது. நிர்மாணத்துறையில் ஆயிரக்கணக்கானோர் தொழிலை இழந்தனர்.

சரியான நகர திட்டமிடல்கள் ஊடாக அனைத்து நகரங்களையும் அழகிய நகரங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அதற்கான புதிய சட்டமொன்றும் உருவாக்கப்படவுள்ளது. அந்த நகர திட்டமிலுக்கு குறைந்தபட்சம் 10,000 பொறியியலாளர்கள் அவசியப்படுவர். அதேபோல் கட்டடக் கலைஞர்களும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களும் அவசியப்படுவர்.

கண்டி நகரத்தில் சிறந்த நகர திட்டமிடல் ஒன்றை மீண்டும் முன்னெடுப்பதற்காக ஜப்பான் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். அந்த நகர திட்டமிடலை பேராதனை வரையில் விரிவுபடுத்த வேண்டும். அதேபோல் இன்னும் பல நகரங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. அந்த அனைத்து சவால்களையும் ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராகுங்கள்.

மேலும், காலநிலை அனர்த்தங்களை வெற்றிக்கொள்ளும் இலக்குகளுக்கு முகம்கொடுக்க இலங்கை தயாராக உள்ளது. 2016ஆம் ஆண்டில் அந்த பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அதற்கான அர்ப்பணிப்புகளை செய்தோம். காலநிலை அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பது தொடர்பான நிகழ்ச்சி நிரலை துரிதப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் உறுப்பு நாடுகளிடத்தில் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் கட்டடக் கலைஞர்களும் காலநிலை அனர்த்தம் தொடர்பான நியதிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். எதிர்கால காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு உகந்த நிர்மாணிப்புகளை வடிவமைக்க வேண்டும். அது தொடர்பில் உரிய தரத்தை உருவாக்கும் பொறுப்பும் உங்களை சார்ந்துள்ளது.

இந்நாட்டில் நிர்மாணிக்கப்படவிருக்கும் காலநிலை அனர்த்தங்கள் தொடர்பான பல்கலைக்கழகத்தில் உள்ளடக்க வேண்டிய பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாம் அறிந்து கொண்டுள்ளோம்.

அண்மைய காலங்களில் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணங்களை 1000 - 2000 வருடங்கள் வரையில் பாதுகாக்க முடியாது. அதனால் முன்னைய காலங்களில் நாட்டின் கட்டடக் கலைக்கு கிடைத்திருந்த அங்கீகாரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்” எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் டக்லஸ் சொனெக், பிரித்தானியாவுக்கான பதில் உயர்ஸ்தானிகர் லீசா வொன்ஸ்டோல் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்களுக்கு தட்டுப்பாடு

## வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு



முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்கள் இல்லாமை பாரிய குறைபாடாகும் என வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லாமை பாரிய குறையாக உள்ளது. குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை உள்ள நிலையில் வைத்திய நிபுணர்கள் அதிகம் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள்.

இரண்டு வைத்தியசாலைகளுக்கும் இரண்டு வைத்தியர்களையாவது நியமிக்க வேண்டும் எனக் கோரியிருந்தோம். எதிர்வரும் காலத்தில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

விசேட ஆளணி எங்களுக்கு தேவையாக உள்ளது. நிதி அமைச்சு புதிய ஆளணியை நியமிக்காத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது.

உள்ளக கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது. அதற்கு திட்டம் ஏதாவது இருந்தால் மேற்கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் காணி பிரச்சினை காரணமாக பாரிய கட்டிடங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

அதேபோல் மன்னாரிலும் சீரி (CT) ஸ்கோன் வந்து திரும்பி போனதால் பிரச்சினை இருந்தது. அங்கும் நிரந்தர வைத்திய பணிப்பாளர் இல்லாமை ஒரு பிரச்சினையாக உள்ளது.

உள்ளக கட்டமைப்பை பேணும் இரண்டு வைத்தியசாலையிலும் குறைபாடாக இருக்கிறது. இது தொடர்பாக கூட்டத்தில் தீர்மானமாக எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்களுடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டு இதனை நிவர்த்தி செய்வதாக கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்றும் கூறினார்.

# ஆன்மீகத் தலைவருக்கும் மத விவகார அமைச்சருக்குமிடையில் விசேட சந்திப்பு





பொலிவேரியன் செய்தியாளர்

அஷ்-ஷெய்க் அஸ்-ஸெய்யத் அபீபுத்தீன் மௌலானா அல்-காதிரி அல்-ஜீலானிக்கும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று (03) இடம்பெற்றது.

தாருல் ஜைலானி சர்வதேச அமைப்பின் இலங்கை கிளையின் இணைப்பாளர் அஷ்-ஷெய்க் ஹனீப் மௌலானா அல்-காதிரியின் கொழும்பு இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தேசிய ஐக்கியத்துக்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம-தலைவர் அஷ்-ஷெய்க் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அகில இலங்கை தரீக்காக்களின் உயர்பீடத்தின் தலைவர் அஸ்-ஷெய்க் நகீப் மௌலானா, தெவட்டகஹ ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் அல்-ஹாஜ் ரியாஸ் சாலி மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.



மட்டக்களப்பு - கல்லடி உதயம் விழிப்புலனற்றோர் நிலையம், தரிசனம் விழிப்புலனற்றோர் நிலையம் மற்றும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனம் போன்றவற்றிலுள்ள மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் குறித்த பகுதியில் வீதி விபத்துகளை தடுக்கும் நோக்குடனும் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி கல்லடி பகுதியில் மின் சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணி ஞாயிற்றுக்கிழமை(06) இடம்பெற்றது. மேற்படி நிலைய மாணவர்களினால் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக இப்பணி இடம்பெற்று வருவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

**படம்:** *மண்முனை செய்தியாளர்*

# சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் வெண்பலகை அறிமுகம்



*மாளிகைக்காடு செய்தியாளர்*

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (ஜீ.எம்.எம்.எஸ்) பெற்றோர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட இலகு கற்பித்தல் வெண்பலகை அறிமுகமும் பாடசாலை குறுஞ்செய்திச்சேவை அங்குரார்ப்பணமும் ஆசிரியர் கையேடு அறிமுகமும் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இலகு கற்பித்தல் வெண்பலகையை அறிமுகம் செய்து வைத்ததுடன் பாடசாலை குறுந்செய்திச்சேவையையும் தொடக்கி வைத்தார். மேலும் ஆசிரியர் கையேடுகளையும் அறிமுகம் செய்து வைத்து மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்களிடம் கேட்டறிந்து மேலதிக ஆலோசனைகளையும் வழங்கி வைத்தார்.

மாணவர்களுக்கு கற்பித்தலில் ஈடுபட்ட வலயக் கல்விப்பணிப்பாளர் மாணவர்களுடன் சிநேகபூர்வ உரையாடல்களை மேற்கொண்டு கல்வி நடவடிக்கைகளின் மேம்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்தார். இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும் கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலீக், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ் அடங்கலாக உறுப்பினர்கள், தொழிலதிபர் எம்.ஜே.எம்.காலீத் உட்பட பிரதி அதிபர், ஆசிரியர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஆசிய மன்றத்தினால் பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கி வைப்பு



*மாளிகைக்காடு செய்தியாளர்*

இலங்கை ஆசிய மன்ற பூரண அனுசரணையில் நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, கல்முனை தமிழ், சம்மாந்துறை கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு சுமார் ஒன்றரை மில்லியன் பெறுமதியான பாடசாலை வாசிகசாலை மற்றும் மாணவர்களுக்கான கடந்த கால வினாப்பத்திர தொகுப்பு நூல்கள் மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை(06) வழங்கப்பட்டன.

ஆசிய மன்ற முன்னாள் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகரும் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனம் மற்றும் சி.ஜி.ஐ. நிறுவனம் ஆகியவற்றின் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம்.வலீத் இலங்கை ஆசிய மன்றத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய, 16 பாடசாலைகளுக்கு அவரின் தலைமையில் ஆசிய மன்ற புத்தகங்கள் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் அன்டன் டீ நல்லதம்பியின் பிரசன்னத்துடன் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும் கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம்.சரிபுதீன், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே.டேவிட், கல்முனை தமிழ் பிரிவு கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சரவணமுத்து, ஆசிய மன்ற திட்ட இணைப்பாளர் எம்.ஐ.ஜாவாஹிர், பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளின் அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், ஆசிய மன்ற அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை பாத்திமா மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா



*எம்.ஐ.எம்.றியாஸ்*

அட்டாளைச்சேனை பாத்திமா மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் கல்லூரியின் தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.ஹனீஸ் தலைமையில் சனிக்கிழமை(05) நடைபெற்றது.

இப் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக வும் சிறப்புப் பேச்சாளராகவும் கொழும்பு ஸம் ஸம் பௌண்டேசன் தலைவர் அஷ்-ஷெய்க் எம்.எச்.எம்.யூசுப் முஃப்தி கலந்துகொண்டிருந்தார்.

பட்டமளிப்பு விழாவின் பெண்கள் அரங்குக்கு பொது வைத்திய நிபுணர் ஆபீதா கையூம்மின் வழிநடத்தலின் கீழ் உதவி பிரதேச செயலாளர் நஜீஹா முஸாபீர், டொக்டர் பறூசா நக்பர், டொக்டர் தஹானா ஹனீஸ் உட்பட கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் பட்டங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையும் இப்பட்டமளிப்பு விழாவில் மொத்தமாக 68 பேர் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இதில் 38 முஆலிமாகளும் 30 ஹாபிழாகளும் அடங்குகின்றனர். இதன்போது முஅல்லிம்கள், முஅல்லிமாக்கள் அதனோடு இணைந்த கல்லூரியின் ஊழியர்கள் மற்றும் பிரதம அதிதி ஆகியோர்கள் நினைவுச்சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாத்திமா மகளிர் இஸ்லாமிய கல்லூரி செயற்பட்டு வருகின்றது.

2007ஆம் ஆண்டு நல்ல சிந்தனையோடு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி பல சவால்களை எதிர்கொண்டு இன்று நல்லதொரு நிலையில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.ஹனீஸ் தலைமையில் உலமாக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் உள்ளிட்ட ஆளுகை சபையினரால் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் மேல் நீதிமன்ற நீதிபதி சட்டமுதுமாணி அஷ்- ஷெய்க் என்.எம்.அப்துல்லாஹ், நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மேலதிக மாகாண பணிப்பாளர் டொக்டர் எம்.ஏ.எம்.நதீர், கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் பிரதித் தலைவர் யூ.எல்.ஏ.அஸீஸ், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைடின், கல்லூரியின் செயலாளரும் சம்மாந்துறை பிரதேச செயலாளருமான எஸ்.எல்.எம்.ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம்.பிர்னாஸ், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.றியாஸ், மௌலவி யூ.எம்.நியாஸி, மௌலவி ஏ.எல்.எம்.அஷ்ரப், கல்லூரியின் ஆளுகை சபை உறுப்பினர்கள், கல்லூரியின் நிர்வாகத்தினர் உட்பட சட்டத்தரணிகள், உலமாக்கள், கல்விமான்கள், பட்டம் பெற்றவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஈச்சம்வட்டி வலியுல்லாஹ்வின் 113ஆவது கந்தூரி வைபவமும் கொடியேற்ற நிகழ்வும்



*மீரா நகர் செய்தியாளர்*

அக்கரைப்பற்று, ஈச்சம்வட்டி வலியுல்லாஹ்வின் 113ஆவது கந்தூரி வைபவமும் கொடியேற்ற நிகழ்வும் அக்கரைப்பற்று ஈச்சம்வட்டி தர்ஹாவில் அதன் பிரதம நம்பிக்கையாளர் சபை தலைவர் அஜ்மீர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சாகாமம் விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி றிஸ்வி, அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல்.எம்.இர்பான், உலமாக்கள், தர்ஹாவின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கந்தூரி வைபவத்தில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் கலந்துகொண்டிருந்தார். இதன்போது உரையாற்றிய அவர்,

அக்கரைப்பற்று பிரதேசத்தில் மூவின மக்களின் நம்பிக்கைக்குரிய வணக்கஸ்தலமாக ஈச்சம்வட்டி தர்ஹா அமைந்துள்ளது. இவ்வணக்கஸ்தலத்தில் வருடந்தோரும் இடம்பெறுகின்ற கந்தூரி வைபவத்தில் மூவின மக்களும் கலந்து கொண்டு இறை நல்லடியார்களின் ஆசியை பெற்று வருவது பல காலமாக இடம்பெற்று வருகின்றது. இது நமக்கான ஒற்றுமை பாலமாக ஆன்மீகம் பெறுகின்ற நிகழ்வாகவும் அமைகின்றது என்று தெரிவித்தார்.

மேலும், உண்மையாக இவ்வாறான நிகழ்வுகள் மக்களிடத்தில் இறை உணர்வையும் இறை நம்பிக்கையையும் அதிகரிக்கச் செய்கின்றன. அதிலும் குறிப்பாக பசித்தோருக்கு உணவளித்து தர்மம் காக்கும் நிகழ்வாக இது அமைகின்றது.

அந்தவகையில் இவ்வாறான இறை நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வை ஏற்பாடு செய்த இப்பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு தனிப்பட்ட ரீதியிலும் இச்சமூகம் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# வாகரையில் சர்வதேச பழங்குடிகள் தினம்



*வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்*

'சுய நிர்ணயத்துக்கான மாற்றத்தின் முகவர்களாக பழங்குடியின இளைஞர்கள்' எனும் தொனிப்பொருளில் சர்வதேச பழங்குடிகள் தினம் சனிக்கிழமை(05) வாகரை குஞ்சன் கல் குளத்தில் கலை கலாசார நிகழ்வுகளுடன் நினைவு கூரப்பட்டது.

கிழக்கு மாகாண சிவில் அமையத்தின் ஏற்பாட்டில் பழங்குடியின தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போது அதிதிகளாக மதகுரு சிவஸ்ரீ ம.ரெயினு சர்மா, கிழக்கு மாகாண மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பாளர் ஏ.எல்.இஸடின், கிழக்கு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத் தலைவர் ஜி.விக்னேஸ்வரன், விரிவுரையாளர் யு.வி.தங்கராசா, மட்டக்களப்பு வனவள பாதுகாப்பு அதிகாரி அருண, வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை தலைவர் ஜி.விக்கினேஸ்வரன் கலந்து கொண்டு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நூல் ஆய்வாளர்களால் இலங்கையில் உள்ள பழங்குடியினர் தொடர்பான வாழ்வியல் விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட கட்டுரைகள் அடங்கிய நூல்கள், ஆவணங்கள் என்பன பழங்குடித் தலைவரிடம் கையளிக்கப்பட்டதுடன் அவற்றினை பாதுகாப்பாக வைத்திருக்க ஆவணக் காப்பகம் ஒன்றும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது பழங்குடி மக்களின் கலை கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன. நிகழ்வின் இறுதியில் கிழக்கு மாகாணத்தில் வசித்து வரும் பழங்குடி மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கான தீர்வினை வேண்டி கிழக்கு மாகாண ஆளுநருக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டது.



திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்ட கிண்ணியா பூவரசந்தீவு வடசல் பாலத்தை தௌபீக் எம்.பி. சனிக்கிழமை (05) பார்வையிட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை தொகுதிகளில் ஐ.தே.கவின் ஒன்றுகூடல்




*அம்பாறை மாவட்ட செய்தியாளர்*

ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனை தொகுதி செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் சந்திப்பு அல்-பஹ்ரியா மகா வித்தியாலய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்றது.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகே, முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா, ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனை மற்றும் சம்மாந்துறை தொகுதிகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எச்.எச்.எம்.நபார், ஓய்வு பெற்ற அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்னாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மேலும் சம்மாந்துறை தொகுதி செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் சந்திப்பு கடந்த சனிக்கிழமை (05) அப்துல் மஜீட் மண்டபத்தில் ஆரம்பமாகி நிறைவடைந்திருந்தது. இந்நிகழ்வுகளில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர். இதன்போது நாடு பூராகவும் கட்சி புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் சம்மாந்துறை மற்றும் கல்முனை தொகுதியிலும் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையில் பிராந்தியத்தில் கட்சியை பலப்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் கட்சிக்கான ஆதரவு கோரும் நடவடிக்கைகள் விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் பேரவையின் உப தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பையின் 50 வருட கால சமூகசேவையை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.அனுசரணையுடன் மாவட்ட காரியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 2022 / 2023 காலப் பகுதியில் சிறந்த முறையில் செயற்பட்ட வை.எம்.எம்.ஏ.களுக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதம ஆலோசகர் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் கல்வி நாதம் எஸ்.எல்.ஆதம்பாவா, ஆலோசகர் ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் எம்.எம்.அஜ்வத், பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ் உட்பட வை.எம்.எம்.ஏ.களின் பதவி வழி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

**படம்:** *அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்*

# மனித விற்பனைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி




திருகோணமலை

சர்வதேச மனித விற்பனைக்கு எதிரான தினத்தை முன்னிட்டு 'மனித விற்பனைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி' எனும் தொனிப்பொருளில் திருகோணமலையில் நடைபவனி மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கு வெள்ளிக்கிழமை(04) இடம்பெற்றது.

IOM நிறுவனத்தின் அனுசரணையுடன் AMCOR நிறுவனத்தின் வழிகாட்டலில் திருகோணமலை மணிக்கூட்டு கோபுர சுற்று வட்டத்திலிருந்து ஆரம்பமான குறித்த நடைபவனி திருகோணமலை நகர மண்டபம் வரை சென்றடைந்தது.

''மனித வியாபாரத்துக்கு எதிராக ஒன்றிணைவோம் உயிர்களைக் காப்போம், மாற்றத்துக்காக நடப்போம், மனித வியாபார வட்டத்தினை உடைப்போம், மனித வியாபாரத்தினை முடிவுறுத்துவோம் வலுப்படுத்துவோம் அறிவூட்டுவோம் கட்டுப்படுத்துவோம், மனித வியாபாரத்தை தடுப்போம் நலிவுற்றவர்களை பாதுகாப்போம் பாதிக்கப்பட்டவர்களை வலுப்படுத்துவோம் மற்றும் விழிப்படைவோம் செயல்படுவோம், மனித வியாபாரத்துக்கு எதிராக நடப்போம்'' எனும் பதாகைகளை ஏந்தியவாறு பாடசாலை மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்ட குறித்த நடைபவனி நகர மண்டபம் வரை சென்றடைந்தது.

திருகோணமலை நகர மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு செயலமர்வின்போது கலந்துகொண்டு கருத்து தெரிவித்த AMCOR தேசிய தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான முரளிதரன், தற்போதைய காலகட்டத்தில் மனித விற்பனையானது அடிமைத்தனத்தின் ஒரு புதிய நவீன வடிவம் எனவும் பல்வேறு வகைகளில் இவ்வாறான அடிமை வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பல சந்தர்ப்பங்களில் எமக்கு தெரியாமலேயே இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பான சரியான விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியிலும் அரச உத்தியோகத்தர்கள் மத்தியிலும் ஏனைய பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடமும் மிகக் குறைவாக காணப்படுகின்றது. இதற்கு காரணம், சரியானதொரு புரிதல் இல்லாமல் காணப்படுவதேயாகும். இது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும் இதனை தடுக்கும் வகையிலும் பல்வேறு வேலை திட்டங்களை எமது அமைப்பின் ஊடாக தொடர்ச்சியாக செய்து வருகின்றோம் என்றார்.

அதன் அடிப்படையில் சர்வதேச ஆட்கடத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் குறித்த விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் குறித்த நிகழ்வில் AMCOR நிறுவனத்தின் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## போடியார் புலம்பல்!



**தேசிய கீதத்த தமிழில் பாடுவதும் குற்றமாகும் என மோட்டு கட்சி எம் பி காமினி லொக்குகே சொல்லியிருக்காரு எலுவா...? ஓண்டா மனே சிங்களதேசத்து தேசிய கீதம் என்ன மண்ணாங்கட்டிக்கு அத தமிழில பாடுற தமிழர்களுக்கு நாடு கிடைக்கும் வரையும் அந்த பாட்ட பாடி என்ன பாடாடிட்டி என்ன.. அதப்பாடாம நல்ல சினிமா பாடல்கள பாடினாலும் பறவாய் இல்ல எலுவா..?**

# காட்டு யானை தாக்கி பலி

கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேரமடு பகுதியில் தனது தோட்டத்துக்கு வந்த காட்டு யானையை விரட்டுவதற்காக வீட்டை விட்டு வெளியே வந்த நபர் வெள்ளிக்கிழமை(04) காலை யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

கந்தளாய் பேரமடு கிராமத்தைச் சேர்ந்த ஆர்.எம்.குணவர்தன வயது(64) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தோட்டத்துக்கு வந்த காட்டு யானையை சத்தம் கேட்டு, விரட்ட வீட்டை விட்டு வெளியே வந்தபோது இவ்வாறு காட்டு யானை உரிமையாளரை தாக்கியது. காட்டு யானைகளின் அச்சுறுத்தல் அதிகமாக உள்ளதாக கந்தளாய் பேரமடு கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சோமாவதி வனப்பகுதியில் இருந்து காட்டு யானைகள் வருவதாகவும் யானை வேலி உரிய முறையில் செயல்படுத்தப்படாததால் தங்கள் கிராமங்களுக்கு காட்டு யானைகள் புகுந்து நாசம் செய்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைத் தொல்லையால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்குக் காரணமான அரசியல் அதிகாரம் கண்டுகொள்ளாமல் இருப்பதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். சடலம் கந்தளாய் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# கிண்ணியாவில் புதிய மைதானம்

**தௌபீக் எம்.பியின் முயற்சிக்கு வெற்றி**

கந்தளாய் செய்தியாளர்

நீண்டகாலமாக புதுக்குடியிருப்பு மற்றும் குட்டியாகுளம் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் பயன்படுத்துவதற்கு மைதானம் இல்லாமல் பல சிரமங்களை எதிர்நோக்கிவந்தனர்.

அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அண்மையில் குட்டியாகுளப் பிரதேசத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வருகின்ற காணியை பயன்படுத்துவதற்கு எம்.எஸ்.தௌபீக் எம்.பியினால் திருகோணமலை மாவட்ட உதவி ஆணையாளர் விஸ்னுவரதனுடன் கலந்துரையாடியமைக்கு அமைவாக, நிபந்தனைகளுடன் அனுமதி வழங்குவதாக குறிப்பிட்டார்.

அவர் குறிப்பிட்டமைக்கமைவாக, தௌபீக் எம்.பியின் முயற்சியுடன் பல வருடங்களுக்கு மேலாக விளையாடுவதற்கு நிரந்தர இடம் இல்லாமல் இருந்த குறை நிவர்த்தி செய்யப்பட்டமை குறித்து பிரதேச மக்கள் நன்றி தெரிவித்தனர்.

# பிரதமர் தினேஷ் தலைமையில் இடம்பெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் கூட்டம்

திகாமடுல்ல, அட்டப்பள்ளம், நாவிதன்வெளி, அம்பாறை மாவட்ட செய்தியாளர்கள்

'புதிய கிராமம்-புதிய நாடு' தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் வெள்ளிக்கிழமை(04) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, விமல வீர திசாநாயக்க, டபிள்யூ. வீரசிங்க, எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசீம், திலக் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள்



எனப் பலரும் கலந்து கொண்ட குறித்த கூட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காக கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி மையங்களை மேம்படுத்துவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் அம்பாறை மாவட்ட பிரதான பிரச்சினைகள் தொடர்பில் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது கருத்துத் தெரிவித்தனர். அத்தோடு நெல் கொள்முதல் வேலைத்திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் விவசாயிகளுக்குரிய உரமானியத்துக்கான வவுச்சர்கள் வழங்கும் நடைமுறையில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

உரமானியத்துக்கான வவுச்சர்கள் உரிய காலத்தில் கிடைப்பதன் மூலமே விவசாய நெற்செய்கையை சிறப்பாக மேற்கொள்வதுடன் அதிக விளைச்சலையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளை பிரதமர் ஏற்றுக்கொண்டதுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

**மாணவிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்**

# விசாரணையை 07 நாட்களுக்கு இடைநிறுத்துமாறு உத்தரவு

ஏறாவூர் செய்தியாளர்

ஏறாவூர் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவர் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணையை அடுத்த ஏழு நாட்களுக்கு இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதையடுத்து எதிர்வரும் 21ஆம் திகதிவரை வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுவதாக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்று அறிவித்துள்ளது. அத்துடன் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மேலதிக நீதிபதியும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதியுமான எஸ்.அன்வர் சாதாத் உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் ஏற்படுத்தியதாக மட்டக்களப்பு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினால் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை வெள்ளிக்கிழமை மூன்றாவது நாளாக நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏறாவூர்ப் பிரதேசத்திலுள்ள பாடசாலையில் 2019ஆம் ஆண்டு தரம் ஏழு வகுப்பு பி பிரிவில் கல்விகற்ற மாணவிகள்மீது ஆங்கில பாடம் கற்பித்த ஆசிரியர் ஒருவர் பாலியல் துன்புறுத்தல் செய்ததாக மட்டக்களப்பு பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினால் ஏலவே நீதிமன்றுக்கு பி அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அண்மையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது குறித்த பாடசாலை மாணவிகள், ஆசிரியைகள், அதிபர் மற்றும் பிரதி அதிபர் என 35பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 15 பேரது சாட்சியங்கள் இரண்டு நாட்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# வறுமைக்கோட்டின்கீழ் வாழும் பெண்களுக்கு உதவி வழங்கல்



கிண்ணியா செய்தியாளர்

வறுமை கோட்டின்கீழ் வாழும் பெண்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், விதவைகள், குறைந்த வருமானம் பெறுவோர், முதலானோருக்கு பெரண்டினா நிறுவனத்தினால் 3500/= ரூபா பெறுமதியான வவுச்சர் வழங்கும் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(04) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையின் கீழ் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிண்ணியா, தம்பலகாமம், கந்தளாய் போன்ற பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய சுமார் ஆயிரத்து 834 குடும்பங்களுக்கு இவ் வவுச்சர் வழங்கி வைக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட விளிம்புநிலை வாழ் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. வறுமையை ஒழிக்கும் நோக்காகக் கொண்ட ஒரு திட்டமாக பெரண்டினா மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்போது உரையாற்றிய பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள நாம் உள்ளூர் உற்பத்திகளை அதிகம் நுகர வேண்டும். வாசனை திரவியங்கள், ஆடைகள் போன்ற பல்வேறு வகையான பொருட்கள் வெளிநாட்டில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் நமது நாட்டின் உற்பத்தித்துறை வீழ்ச்சி காண்கிறது. இதைவிடுத்து, பல உற்பத்திகளை நாமே இங்கு உற்பத்தி செய்வோமானால் தங்களை வளப்படுத்தி முன்னேற்றமடையலாம் என்றார்.

குறித்த நிகழ்வில், பெரண்டினா நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் பி.எம்.றகீம், பிராந்திய முகாமையாளர் திருச் செல்வம், கிளை முகாமையாளர்,பொலிஸ் அதிகாரி,விவசாய போதனாசிரியர், இலங்கை வங்கி ஊழியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நீரின்மையால் நெல் அறுவடையில் நஷ்டம்

மூதூர் செய்தியாளர்

திருகோணமலை, தோப்பூர் அல்லைக்குளத்தை நம்பி இம்முறை சிறுபோக வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தற்போது இடம்பெறும் நெல் அறுவடையில் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தோப்பூர் - அல்லைக்குளத்தை நம்பி கண்ணாண் வெளி, அல்லைக்குள வெளி, கிரான்வெளி உள்ளிட்ட வெளிகளில் சுமார் 350 ஏக்கர் வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இம்முறை சிறுபோகத்தின்போது தோப்பூர் அல்லைக்குளத்துக்கு போதுமான நீர் வழங்கப் படாமையால் நீர் இறைக்கும் பம்பிகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபா செலவிட்டதாகவும் அவ்வாறு வயலுக்கு நீர் பாய்ச்சியும் போதுமான நீர் கிடைக்காமையால் விளைச்சலில் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தோப்பூர் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தோப்பூர் அல்லைக்குளம் தற்போது நீர் இல்லாமல் காடு போன்று காட்சியளிக்கின்றது. இதனால் எதிர்வரும் பெரும்போகத்தின் போதாவது உரிய நேரத்துக்கு தோப்பூர் அல்லைக் குளத்துக்கு நீரினை வழங்க அதிகாரிகள் முன் வரவேண்டும் என தோப்பூர் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இரு குழுக்களிடையேயான மோதலில் மூவருக்கு காயம்

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

முன்விரோதம் காரணமாக இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் மூவர் காயமடைந்த நிலையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய தபாலக வீதியில் உள்ள ஆடம்பர வீடு ஒன்றில் இச்சம்பவம் வியாழக்கிழமை (03) இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் இரு வேறு போதைப்பொருளுடன் தொடர்புபட்டதாக கூறப்படும் இரு குழுக்களே மோதலில் ஈடுபட்டுள்ளதுடன் ஒரு குழுவின் அங்கத்தவர்கள் குறித்த வீட்டினுள் அத்துமீறி தாக்கியதுடன் உடைமைகளையும் அடித்து நொறுக்கியுள்ளனர்.

மேலும், அவ்வீட்டில் இருந்த குழுவின் முக்கிய உறுப்பினர்களையும் அடித்தும் வெட்டியும் காயப்படுத்தி தப்பிச் சென்றுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் தாக்குதலுக்குள்ளான வீட்டின் உரிமையாளர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். மேலும் குறித்த தாக்குதலில் ஒரே குழுவைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள்ளதுடன் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படும் இரு குழுக்களிலும் உள்ள நபர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொலிஸார் விசேட அதிரடிப்படையினராலும் போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு பிணையில் விடுதலையானவர்கள் என்பதும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

# முச்சக்கரவண்டி விபத்தில் பெண்ணொருவர் பலி

**சாரதி வைத்தியசாலையில் அனுமதி**

குருக்கள்மடம் செய்தியாளர்

களுவாஞ்சிகுடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட செட்டிப்பாளையம் பகுதியில் சனிக்கிழமை(05) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதி வழியே செட்டிப்பாளையம் மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியானது, நிலைதடுமாறி வீதியோரமிருந்த மின்சாரத்தூணில் மோதுண்டு தூக்கி வீசப்பட்டு வீதியோரமாக நின்றுகொண்டிருந்தவர் மேல் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் வீதியோரம் நின்றுகொண்டிருந்த செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த 70 வயதான பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் முச்சக்கரவண்டியை செலுத்திவந்த எருவில் பகுதியைச் சேர்ந்த சாரதிக்கு காயமேற்பட்டுள்ளதோடு வைத்திய சிகிச்சைகளுக்காக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பீபா மகளிர் உலகக்கிண்ணம் - 2023

## முதல் முறையாக காலிறுதிக்குள் நுழைந்த ஸ்பெயின் முதல் சுற்றுடன் வெளியேறிய பிரபல அணிகள்



நடப்பு பீபா மகளிர் உலகக் கிண்ண உதைபந்து தொடரில் ஸ்பெயின் அணி 5-1 என்ற கோல் கணக்கில் சுவிட்சர்லாந்தை வீழ்த்தி முதல் முறையாக காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறி வரலாறு படைத்தது.

ஈடன் பார்க் அவுடர் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ரவுண்ட் ஒவ் 16 போட்டியில் ஸ்பெயின் மற்றும் சுவிட்சர்லாந்து அணிகள் மோதின. இதில் 5-1 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் வெற்றிபெற்று பலம்வாய்ந்த சுவிட்சர்லாந்தை வெளியேற்றி காலிறுதிக்கு தகுதிபெற்றது.

நேற்றுக் காலை நடைபெற்ற நெதர்லாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான நொக்அவுட் ஆட்டத்தில் நெதர்லாந்து 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டி காலிறுதிக்கு தகுதிபெற்றது. அதன்படி வெள்ளிக்கிழமை நடைபெறும் முதல் காலிறுதி ஆட்டத்தில் நெதர்லாந்து - ஸ்பெயின் அணிகள் மோதவுள்ளன.

இதேவேளை போட்டியிலிருந்து ஜேர்மனி முதல் சுற்றுடன் வெளியேறியது.

மகளிர் உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறையாக குரூப் சுற்றிலேயே ஜேர்மன் அணி வெளியேறியது. முன்னதாக, ஆர்ஜென்ரீனா, பிரேசில், இத்தாலி, கனடா போன்ற பெரிய அணிகள் முதல் சுற்றுடன் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# உபாதையால் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பை இழக்கும் யுபுன்



இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரரான யுபுன் அபேகோன், தனது காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக இம்முறை உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்கப்போவதில்லை என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்தக் காயம் காரணமாக தாய்லாந்தின் பட்டாயாவில் அண்மையில் நடைபெற்ற 24ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரிலும் அவர் பங்கேற்கவில்லை. எவ்வாறாயினும், எதிர்வரும் செப்டெம்பர் 29ஆம் திகதி முதல் ஒக்டோபர் 5ஆம் திகதி வரை சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் நிச்சயம் பங்கேற்பேன் என அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதி ஹங்கேரியின் புடாபெஸ்ட்டில் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்குத் தகுதி பெறுவதற்காக வீரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் கடந்த 31ஆம் திகதியுடன் முடிவடைந்தது. குறித்த காலப்பகுதியில் தனிநபர் போட்டி நிகழ்ச்சியொன்றுக்காக இலங்கை சார்பில் தகுதிபெற்ற ஒரே வீரர் யுபுன் அபேகோன் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது விற்பனையில்!

ஜூனியர் தமிழன் வழங்கும்

2023ஆம் ஆண்டுக்கான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை

'வெற்றிக்கு வழிவகுக்கும்'

விசேட மாதிரி வினாத்தாள் பொதி



விலை ரூ.850/= மட்டுமே

பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308 / 0741684643

# வலைபந்து உலகக்கிண்ணம் - 2023

## ஒரேயொரு வெற்றியுடன் இறுதி இடத்தை அடைந்த இலங்கை



தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நேற்றுடன் நிறைவுக்கு வந்த 16ஆவது வலைபந்து உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி ஒரே ஒரு வெற்றியுடன் ஒட்டுமொத்த நிலையில் 16ஆவது (இறுதி) இடத்தைப் பெற்றது.

H குழுவுக்கான முன்னோடி சுற்றில் பார்படோஸை வெற்றிகொண்ட இலங்கை, நிரல்படுத்தலுக்கான கடைசிப் போட்டியில் சிங்கப்பூரிடம் 46 49 என்ற கோல்கள் அடிப்படையில் தோல்வியடைந்து கடைசி இடத்தைப் பெற்றது. நான்கு வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூரை முன்னோடி சுற்றிலும் நிரல்படுத்தல் போட்டியிலும் வெற்றிகொண்ட இலங்கை, இம்முறை அந்த இரண்டு சுற்றுகளிலும் சிங்கப்பூரிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடருடன் தர்ஜினி சிவலிங்கம் தனது 20 வருட வலைபந்தாட்ட விளையாட்டிலிருந்து விடைபெற்றார்.

# விளையாட்டுத் துளிகள்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் ஒருநாள் போட்டிகளுக்கான தலைவர் பதவியிலிருந்து முன்னணி வீரர் தமிம் இக்பால் விலகுவதாக அறிவித்துள்ளார். தமிம் இக்பால் அவரது முதுகுப்பகுதியில் ஏற்பட்டுள்ள உபாதையிலிருந்து குணமடைந்துவரும் நிலையில், அடுத்துவரும் ஆசியக்கிண்ணத் தொடரில் விளையாடமாட்டார் என்ற அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. கடந்த மாதம் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்தார். எனினும், பங்களாதேஷ் பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் ஓய்விலிருந்து திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★★

ஆர்.சி.பி. அணியின் புதிய பயிற்சியாளராக சிம்பாப்வே அணியின் முன்னாள் வீரரான அண்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் மூன்று ஆண்டுகள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த அணியின் பயிற்சியாளராக இருந்த சஞ்சய் பங்கர் மற்றும் இயக்குனர் மைக் ஹெசன் ஆகியோரின் ஒப்பந்தங்கள் நீட்டிக்கப்படாத நிலையில், அந்த அணியின் ஏழாவது பயிற்சியாளராக அண்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

★★★★★★★★★★★★★★

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவின் தலைவராக முன்னாள் வீரரும், அந்த அணியின் முன்னாள் பயிற்சியாளருமான மிஸ்பா உல் ஹக் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் முன்னாள் வீரர்களான இன்சமாம் உல் ஹக் மற்றும் மொஹமட் ஹபீஸ் ஆகிய இருவரும் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மூவர் அடங்கிய குழுவானது பாகிஸ்தானின் உள்ளூர் கிரிக்கெட்டையும் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகக் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

★★★★★★★★★★★★★★

இந்திய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரான மனோஜ் திவாரி அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலுமிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 37 வயது நிரம்பிய மனோஜ் திவாரி, இந்திய அணிக்காக 12 ஒருநாள் மற்றும் 3 ரி 20 போட்டிகளில் மாத்திரமே ஆடியிருக்கிறார். கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள மனோஜ் திவாரி இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகத் தற்போது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★★

இந்தியாவின் சென்னையில் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்றுவரும் ஆசிய ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரில், ஒவ்வொரு கோலுக்கும் 11 மரக்கன்றுகள் நடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆசிய ஹொக்கி சம்பியன்ஷிப் தொடர் சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

★★★★★★★★★★★★★★

இந்தியா, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான முதல் ரி 20 போட்டி கடந்த வியாழக்கிமை தரோபாவில் உள்ள பிரையன் லாரா மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் தாமதமாக பந்து வீசியதற்காக இந்திய அணிக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 5 சதவீதம் அபராதமும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 10 சதவீதம் அபராதமும் ஐ.சி.சி. விதித்துள்ளது.

★★★★★★★★★★★★★★

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் அலெக்ஸ் ஹேல்ஸ் அனைத்து விதமான சர்வதேச போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். கிட்டத்தட்ட 11 ஆண்டுகள் இங்கிலாந்து அணிக்காக பல்வேறு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அலெக்ஸ் ஹேல்ஸ் விளையாடியுள்ளார்.

★★★★★★★★★★★★★★

நடப்பு எல்.பி.எல். தொடரின் 8ஆவது ஆட்டத்தில் தம்புள்ள அவுறா அணி 10 ஓட்டங்களினால் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியை வீழ்த்தி தொடரில் 2ஆவது வெற்றியைப் பதிவு செய்தது. இதேவேளை, 9 ஆவது ஆட்டத்தில் பி-லவ் கண்டி அணி 8 விக்கெட்டுகளினால் நடப்பு சம்பியன் ஜவ்னா கிங்ஸ் அணியை வீழ்த்தி தொடரில் இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

# 10 ஆண்டுகளின் பின் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் களமிறங்கும் இலங்கை அஞ்சலோட்ட அணி



ஹங்கேரியின் புடாபேஸ்ட் நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 4×400 மீட்டர் அஞ்சலோட்டப் போட்டிக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது. இதன்மூலம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை அஞ்சலோட்ட அணி உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதிபெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

இலங்கை 4×400 மீட்டர் அஞ்சலோட்ட அணி தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்ற 25ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் பங்குகொண்டு 3 நிமிடங்கள் 01.56 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவுசெய்து தங்கப் பதக்கத்தை வென்றது. இதன்மூலம் இலங்கை அஞ்சலோட்ட அணிக்கு உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பிற்கான அணிகள் தரப்படுத்தலில் 12ஆவது இடத்தைப் பிடிக்க முடிந்தது.

அருண தர்ஷன, ராஜித ராஜகருணா, பபசர நிகு மற்றும் காலிங்க குமாரகே ஆகிய நான்கு வீரர்களுமே ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற இலங்கை அணியில் இடம்பெற்றிருந்தனர். அதேபோல, மேலதிக வீரராக பசிந்து கொடிகார அணியில் இடம்பிடித்திருந்தார். உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 4×400 மீட்டர் அஞ்சலோட்டப் போட்டிக்கு முதல் 16 இடங்களில் உள்ள அணிகளே தகுதி பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வாரம் சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற 101ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் போட்டியிட்ட இதே அஞ்சலோட்ட அணி இந்திய அணியுடன் போட்டியிட்டு இரண்டாவது இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### இன்றைய போட்டிகள்

LPL T20 LANKA PREMIER LEAGUE 2023

கொழும்பு எதிர் காலி (பி.ப - 3.00)

தம்புள்ள எதிர் ஜவ்னா (இரவு - 7.00)



அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகம் நடத்திய 23 வயதிற்குட்பட்ட அணிகள் கலந்துகொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் நிந்தவூர் அட்வெஞ்சர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இறுதிப் போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக ஹம்தானும், ஆட்டநாயகனாக சதீர் அஹமட்டும் தெரிவு செய்யப்பட்டனர். (படம் - அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

# மாகாண கராத்தே போட்டியில் மகாதேவா சுவாமிகள் இல்லம் 74 பதக்கங்கள் பெற்று சாதனை



■ மு.தமிழ்செல்வன்

2023 இற்கான இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வட மாகாணத்திற்கான கராத்தே சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்ல மாணவர்கள் 74 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட பொது உள்ளக விளையாட்டு அரங்கில் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் கலந்து கொண்ட மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல மாணவர்கள் 33 தங்கம், 22 வெள்ளி, 19 வெண்கலப்பதக்கங்கள் பெற்று மாவட்டத்திற்கும் இல்லத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். இவர்கள் சிகான் எஸ். விஜயராஜிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் நடைபெற்ற பூப்பந்தாட்ட அறிமுக பயிற்சி



■ கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம், மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன் பாடசாலைச் சிறுவர்களுக்காக ஒவ்வொரு போயா தினத்திலும் நடத்தும் பூப்பந்தாட்ட அறிமுக பயிற்சியின் இரண்டாவது கட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (01) மட்டக்களப்பு வெபர் உள்ளக விளையாட்டரங்கில் சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் அங்கத்தவர்கள் முன்னிலையில் பிரதம பயிற்றுவிப்பாளர் கமலன் தலைமையில் இடம்பெற்றது.

110 சிறுவர்களின் பங்களிப்புடன் நடைபெற்ற இப்பூப்பந்தாட்ட பயிற்சி நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வைத்திய கலாநிதி எஸ். ரஜீவன் கலந்து கொண்டு சிறுவர்களுக்கு விளையாட்டின் தேவைபற்றி சிறப்பான விளக்கம் கொடுத்தார். இப்பயிற்சிக்கு மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். ரவீந்திரன் பங்கேற்று முழுப் பங்களிப்பையும் வழங்கினார்.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7